Vol. 38 Issue No. 55 2025 Oct 25-28 Rs. 30
ஆண்டு – 38 இதழ் – 55 2025 அக். 25–28 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்




## சர்ச்சையில் சிக்கிய பைசன்!




# பாராட்டிப் பேசு! பணத்தை வாங்கு!

## - த.வெ.க. நிவாரண லட்சணம்!



# தி.மு.க.வுக்கு ஷாக் தந்த சென்னை சர்வே!

# உ.பி.க்கள் உற்சாக தீபாவளி!

“ஹலோ தலைவரே, கனமழை பரவலாக பெய்த நிலையிலும் மக்கள், வண்ண வண்ணப் புத்தாடை அணிந்து, விதவித இனிப்பு வகைகளில் அன்பை வெளிப்படுத்தி, பட்டாசுகளையும் வெடிச்சி, தீபாவளியை உற்சாகமாகவே கொண்டாடியிருக்காங்க.”

‘‘உண்மைதாம்பா, ஆளுங்கட்சி-எதிர்க்கட்சிகளின் தீபாவளி எப்படியிருந்தது?”



“ஆளுங்கட்சி உடன்பிறப்புகள், தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சி குறையாம கொண்டாடியிருக்காங்க. மாவட்டக் கழக நிர்வாகிகள் தொடங்கி, கிளைக்கழக பொறுப்பாளர்கள் வரை, கட்சி நிர்வாகிகள் அனைவரையும், அவரவர் பொறுப்புக்கு ஏற்ப கணிசமாகக் கவனிச்சி ரொம்பவே பூரிக்கவச்சிருக்கு அறிவாலயம். குறிப்பா 5 ஆயிரம் பத்தாயிரத்தில் ஆரம்பிச்சி, சில லட்சங்கள் வரை அவர்களுக்கு கவர் விநியோகிக்கப்பட்டிருக்கு. போதாக்குறைக்கு, துணிமணிகள், இனிப்புகள், பட்டாசுகளும் வாரி வழங்கப்பட்டிருக்கு. அதேபோல் பெண் நிர்வாகிகளுக்கு கூடுதலாக வீட்டு உபயோகப் பொருட்களையும் அள்ளிக் கொடுத்து அசர வச்சிருக்காங்க. தேர்தலை மனசில் வச்சிக்கிட்டுதான் இந்த அளவுக்கு வாரி கொடுத்திருக்காங்க. இதில் இளைஞரணி நிர்வாகிகளை உதயநிதி கவனித்துக்கொண்டார். ஆனால், மற்ற அணிகளின் நிர்வாகிகள் கவனிக்கப்படாததால் அவர்கள் தரப்பில் உற்சாகம் தெரியலை.”

‘‘அறிவாலய வெகுமதியிலும் ஒருசில தி.மு.க. நிர்வாகிகள் கை வைத்ததாகப் புகார் வருகிறதே?”

“உண்மைதாங்க தலைவரே, கட்சி நிர்வாகிகளுக்கு அறிவாலயம் வழங்கிய தீபாவளிப் பரிசிலும் ஒருசில நிர்வாகிகள் விளையாடியதாகப் புகார் எழுந்துள்ளது. குறிப்பாக, தென்மண்டலத்தைச் சேர்ந்த தி.மு.க. மா.செ.வும், எம்.எல்.ஏ.வுமான அந்த நிர்வாகி, இப்படிப்பட்ட குற்றச்சாட்டில் சிக்கியிருக்கிறார். அவர் பொறுப்பில் இருக்கும் மாவட்டத்தில், தி.மு.க.வின் சார்பு அணிகளுக்கு தலா ரூ 25 ஆயிரம் வீதம் அறிவாலயம் அனுப்பியதாம். ஆனால் அந்த மா.செ.வோ, கட்சித் தலைமை உங்களுக்கு ரூ10 ஆயிரம் கொடுக்கச் சொல்லியிருக்கிறது என்று சொல்லிவிட்டு, மிச்சத்தை விழுங்கி விட்டாராம். அதேபோல், வட்டப் பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் அடங்கிய குழுவிற்கு கொடுக்கப்பட்ட தீபாவளி பரிசான ரூ.5 ஆயிரத்திலும்



**சென்னையில் 3 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்**

# ர.ர.க்கள் அப்செட்!



ரூ 3 ஆயிரம் வீதம் எடுத்துக்கொண்டாராம். இதே போல் வார்டு செயலாளர்களின் வெகுமானத்தையும் அவர் கபளீகரம் செய்துவிட்டாராம். இதுபோல் அங்கங்கே ஒருசிலர் மீது குற்றச்சாட்டை வைக்கிறார்கள் உடன்பிறப்புகள்."

"சரிப்பா, பிரதான எதிர்க்கட்சிக்கு இந்த தீபாவளி எப்படி இருந்தது?"

''அ.தி.மு.க. நிர்வாகிகளை எடப்பாடி கவனிப்பார் என அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், கரன்சிக் கட்டுகள் அவிழ்க்கப்படவில்லை. கடந்த 2 வருடங்களாக கட்சி நிர்வாகிகளைக் கண்டுகொள்ளாத எடப்பாடி, தேர்தல் நெருங்கியுள்ள நிலையிலாவது இந்த தீபாவளிக்குக் கவனிப்பார் என அவர்கள் தரப்பில் வலுத்திருந்த ஆர்வம், புஸ்வாணமாயிடுச்சி. வசதி படைச்ச மா.செ.க்களும், மாஜி மந்திரிகளும் மட்டும், தங்கள் மாவட்ட நிர்வாகிகளுக்கும் தங்கள் ஆதரவாளர்களுக்கும் பண முடிப்புகளோட இனிப்பையும் வழங்கி, தங்கள் அளவுக்கு அவர்களை மகிழ்ச்சியில் திளைக்கவைத்திருக்கிறார்கள். இருப்பினும், பெரும்பான்மையான அ.தி.மு.க. நிர்வாகிகள் மத்தியில் ஆதங்கமும் அதிருப்தியும் வெடித்தபடி இருக்கிறது. இதைத் தாமதமாகக் கேள்விப்பட்ட எடப்பாடி, பொங்கலுக்கு மிகச் சிறப்பாக கவனித்துவிடலாம். தீபாவளிக்கும் சேர்த்து பொங்கலுக்கு வரவேண்டியது வரும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு ஆறுதல் செய்தியை வழங்கியிருக்கிறார். மற்ற கட்சிகளில் செல்வாக்குள்ள பொறுப்பாளர்கள், தங்கள் ஆதரவாளர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்காங்களாம்."

''தீபாவளி நேரத்தில், தென்மாவட்ட அ.தி.மு.க. பிரமுகர் ஒருவருக்கு அதிர்ச்சி அனுபவம் கிடைத்ததாகச் சொல்கிறார்களே?"

''ஆமாங்க தலைவரே, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உடன்குடியைச் சேர்ந்தவர் 'குணமானவர்'. அ.தி.மு.க.வில் முக்கிய பிரமுகரான அவரை, 'உரக்கடைக்காரர்' என்றால், எல்லோருக்கும் தெரியும். மேலும் சிட் பண்ட், ரியல் எஸ்டேட் பிசினஸிலும் அவர் ஈடுபட்டுவருகிறார். அவரை சமீபத்தில் செல்போனில் அழைத்த ஒரு பெண் குரல், 'ஏதேனும் லோன் வேண்டுமா?' என்று கேட்க... அந்த பிரமுகரோ, அந்த செல்போன் பெண்ணிடம் வழிந்திருக்கிறார். ஒரு கட்டத்தில், 'நாம் தனிமையில் சந்திக்கலாமா...?' என, அந்தப் பெண்ணிடம் அவர் கேட்க, அவரை ஒரு இடத்திற்கு அழைத்திருக்கிறார் அந்தப் பெண்மணி. உற்சாகமாக 'புல்லட்டில்' சென்ற அவரை, அந்தப் பெண்ணுடன் காரில் வந்தவர்கள், மடக்கிப் பிடித்து, அடித்து உதைத்ததோடு, தேரிக் காட்டில், கழுத்து வரை புதைத்து, 50 லட்சம் கொடுத்தால்தான் உன்னை விடுவோம் என்று நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து ஷாக் கொடுத்திருக்கிறார்கள். பின்னர் அவர் அணிந்திருந்த

ராங்-கால்!

www.nakkheeran.in

நடிகை மனோரமாவின் மகன் பூபதி மூச்சுத்திணறல் காரணமாக (அக்.23) காலமானார்

# தி.மு.க.வுக்கு ஷாக் தந்த சென்னை சர்வே!

நகை, பணம் உள்ளிட்டவற்றைப் பறித்துக் கொண்டு, அவரைத் துரத்திவிட்டார்களாம். போலீஸுக்குப் போனால் தனக்குத்தான் அசிங்கம் என்று கருதிய அந்த அ.தி.மு.க. பிரமுகர், எல்லாவற்றையும் மென்று விழுங்கி, சைலண்டாகி விட்டாராம்.''

''பனையூர் தரப்பின் தீபாவளி எப்படியிருந்ததாம்?''

''தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வில் தீபாவளி நிலைமை இப்படியிருக்க, பனையூர்த் தரப்பான நடிகர் விஜய் தரப்பினரும் ஏமாற்றத்தையே அனுபவிச்சிருக்காங்க. கரூர் அசம்பாவிதத்தைக் காரணம் காட்டிய விஜய், 'இந்த வருடம் நமக்கு தீபாவளிப் பண்டிகை இல்லை. அதனால் யாரும் தீபாவளி கொண்டாடாதீர்கள்'னு நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டாராம். ஆனால், இதனை அக் கட்சி உறுப்பினர்கள் ஏற்க மறுத்துவிட்டார்களாம். ஒருசில நிர்வாகிகள் செய்த தவறுக்கு நாங்கள் எதற்குத் துயரத்தைச் சுமக்கணும்?. எங்கள் வீட்டில் அப்பா, அம்மா உள்ளிட்ட குடும்பத்தினர் தீபாவளி கொண்டாடும் போது, நாங்கள் மட்டும் துக்கத்தை அனுஷ்டிக்க முடியாது என்று சொல்லி விட்டார்களாம். இந்தநிலையில், தீபாவளி சமயத்தில், த.வெ.க.வின் முக்கிய நிர்வாகியான புஸ்ஸி ஆனந்தே, தனது 25ஆவது திருமணநாளை வெகு விமரிசையாகத் தனது குடும்பத்தினருடன் கொண்டாடியிருக்கிறாராம். இது த.வெ.க. தொண்டர்கள் மத்தியில் ஏக எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறதாம்.''

''தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருக்கும் நிலையில், நடிகர் விஜய் தரப்பு காங்கிரஸுடன் ரகசிய டீலிங்கில் இருப்பதாகச் சொல்கிறார்களே?''

''நடிகர் விஜய் தரப்பு, தங்களுக்கு வரும் தேர்தலில் வாக்கு வங்கி பலமாக இருக்கும் என்று கருதுகிறது. அதனால் தங்கள் தலைமையில் ஒரு கூட்டணியை உருவாக்க அது விரும்புகிறதாம். இதனால் ஒரு பக்கம் கூட்டணிப் பேச்சு வார்த்தையை ஆதவ் அர்ஜுனா மூலம் எடப்பாடியிடம் பேசிக்கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் காங்கிரஸின் டெல்லி தலைவர்களுடன் ரகசியமாக டீலிங்கைத் தொடங்கியது. காங்கிரஸோ, 'உங்களை நாங்கள் சுத்தமாக மறுதலிக்கவில்லை. கொஞ்சம் பொறுத்திருங்கள்' என்று சொல்லியிருக்கிறதாம். இதன்மூலம், தி.மு.க.வில் தங்களுக்கு போதுமான சீட் ஒதுக்கப்படாவிட்டால், மற்றொரு சாய்ஸாக விஜய்யை காங்கிரஸ் வைத்திருக்கிறது என்கிறார்கள் டெல்லித் தரப்பினர்.இந்த நிலையில் பா.ஜ.க. தலைமை, விஜய்யைத் தங்கள் பக்கம் எப்படியாவது கொண்டுவர வேண்டும் என்று கருதுகிறது. ஆனால் தமிழக மாஜி பா.ஜ.க. நிர்வாகிக்கோ, விஜய் தங்கள் பக்கம் வருவதில் கொஞ்சமும் விருப்பம் இல்லையாம். ஒருவேளை விஜய், பா.ஜ.க. அணிக்கு வந்தால், தனது நெருங்கிய நண்பரான டி.டி.வி.தினகரனை, அவர் தி.மு.க. கூட்டணிக்கு அனுப்பிவைப்பார் என்றும் அவரது ஆதரவாளர்கள் சொல்கிறார்கள்.''

''இதெல்லாம் ஒருபக்கம் இருந்தாலும் தி.மு.க. எம்.பி. கனிமொழி தரப்பில் பரபரப்பு தெரியுதே?''



''ஆமாங்க தலைவரே, தேர்தல் பணிகளை முன்னெடுத்துச் செல்ல, தி.மு.க.வில் 7 மண்டலப் பொறுப்பாளர்களைக் கடந்த மே மாதம் நியமித்தார் ஸ்டாலின். அந்த வகையில், நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்கள் அடங்கிய மண்டலத்தின் பொறுப்பு கனிமொழிக்கு ஒதுக்கப்பட்டது. அந்த மாவட்டங்களில் கட்சிக்குள் நடந்துவரும் கோஷ்டி பூசல்களை அவர் சரி செய்து வருகிறார். தீர்க்கமுடியாத சில பிரச்சனைகளை ஸ்டாலினின் கவனத்துக்கும் எடுத்துச்சென்று அவரின் ஆலோசனையின் பேரில் தீர்த்தும் வருகிறார். இந்த


**கர்நாடகாவில் வாக்காளர் பட்டியலில் பெயரை நீக்க தலா ரூ.80 லஞ்சம்: விசாரணையில் அம்பலம்**




நிலையில், அவர் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டத் தொகுதிகளில், யார் யாரை வேட்பாளர்களாக அறிவிக்கலாம் என்று, கட்சித் தலைமை அவரிடம் ஒரு ரிப்போர்ட்டை கேட்டிருக்கிறது. அது தொடர்பான ஆய்வுகளில் அவர் தீவிரமாக இருக்கிறார்.”

“இந்த நிலையில் சென்னையில் தி.மு.க. ரகசிய சர்வே எடுத்ததாகச் சொல்கிறார்களே?”

“ஆமாங்க தலைவரே, சென்னையைத் தனது கோட்டையாக தி.மு.க. கருதிக்கொண்டிருந்தது. இந்த நிலையில், தி.மு.க. அங்கே எடுத்த ரகசிய சர்வேயின்படி, சென்னையில் கொஞ்சம் பலவீனம் தெரிந்ததாம். அதாவது தற்போதைய நிலையில், ஃபிஃப்ட்டி ஃபிஃப்ட்டி என்பதாகவே தங்களுக்கு ஆதரவு இருப்பதாக அது கண்டறிந்திருக்கிறதாம். அதனால், ஷாக்கான தி.மு.க., சென்னையின் மீது தன் கவனத்தை அதிகமாகக் குவிக்க ஆரம்பித்திருக்கிறது என்கிறார்கள். தற்போதைய கனமழை தொடர்பான நிவாரணப் பணிகளைக் கூட சற்றும் தொய்வில்லாமல் செய்து, சென்னை மக்களிடம் சபாஷ் வாங்கவேண்டும் என்று கட்சிப் பொறுப்பாளர்களிடம் உத்தரவிட்டிருக்கிறாராம் ஸ்டாலின். சென்னை மக்களைக் கவர இன்னும் என்னென்ன செய்யலாம் என்றும், அறிவாலயம் யோசித்து வருகிறதாம்.”



“கரூர் அசம்பாவித விசாரணையைக் கண்காணிக்கும் குழு களமிறங்கி விட்டதா?”

“ஆமாங்க தலைவரே, கரூர் அசம்பாவிதம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், அதைக் கண்காணிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் மூவர் குழுவை அமைக்கச் சொன்னது. ரஸ்தோகி தலைமையில் இடம்பெற இருந்த அந்த 2 அதிகாரிகள் யாராக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக நிலவிய நிலையில் தற்போது சோனல் மிஸ்ரா மற்றும் சுமித் சரண் ஆகிய 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மத்திய அரசுப் பணியில் இருந்த இவர்கள், ஏற்கனவே தமிழக அரசுப் பணியில் இருந்தபோது இருவருமே சட்டம் ஒழுங்கு பணியில் சிறப்பாக செயல்படாதவர்கள். இருவருமே ஒன்றிய அரசு என்ன சொல்கிறதோ, அப்படியே நிறைவேற்றக் கூடியவர்கள். இவர்கள் இருவரது நியமனமும் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இப்போதுதான் இந்த டீம் முதல் தகவல் அறிக்கையை நேற்று, அதாவது 22-10-25 அன்று கோர்ட்டில் தாக்கல் பண்ணியுள்ளதாம்.”

“சேலம் பகுதியிலிருக்கும் ஒரு முக்கிய அ.தி.மு.க. பிரமுகரை பற்றிய கிசுகிசு அடிபடுதே, உண்மையா?”

“ஆமாங்க தலைவரே, சேலத்துல அவர் வீட்டிலிருந்த சமையல்காரிக்கும் இவருக்கும் இருந்த கனெக்சனால, இவரு சென்னையிலருந்து சேலத்திற்கு வாராவாரம் வந்திடுறாராம். அங்கிருக்க கட்சிக்காரங்க இந்த மேட்டர புரிஞ்சுக்காம, நம்ம தலைவர் வாரா வாரம் நம்ம தொகுதிய கவனிக்க வந்துடுறாரேன்னு ஆச்சர்யப்பட்டிருக்காங்க. ஆனால் தலைவரோட டிரைவருக்கு உண்மை தெரிஞ்சதால, அதை அப்படியே தலைவரோட மனைவி காதுல போட... குடும்பத்துக்குள்ள பிரச்சனை வெடிச்சிருக்காம். இதுல அந்த டிரைவரை வேலைய விட்டு தூக்கினால் பிரச்சனை வெளில லீக்காகிடுமேன்னு மிரட்டி கூடவே வச்சிருக்காராம். இதுக்கிடையில, ஒரு கணவன் -மனைவி பஞ்சாயத்து தலைவர்கிட்ட வந்திருக்கு. அவரோ ரெண்டு பேரையும் பிரிச்சு, அந்த பெண்ணை தலைமைச் செயலகத்தில் பணியமர்த்தி தன்னோட வசமாக்கிட்டாராம். இதனாலதான் இப்பல்லாம் எங்கூட பேசறதில்லையான்னு தலைவரோட முன்னாள் செட்டப் கோவிச்சுக்கிச்சாம். இந்த விவகாரம்தான் கிசுகிசுவா சுத்துது. இதெல்லாம் இருந்தாத்தான் பெரிய மனுசங்கபோல தலைவரே...”

**“நானும் என் கவனத்துக்கு வந்த ஒரு தகவலைப் பகிர்ந்துக்கறேன். தமிழக ஆயுதப் படையில் ஐ.ஜி.யாக இருப்பவர் ஜெயகவுரி. இவர் தனது சொந்த உபயோகத்திற்கு, துறையின் 5 வாகனங்களைப் பயன்படுத்தி வருகிறாராம். மேலும் பந்தா காட்ட விரும்பும் அவர், தான் வெளியே செல்லும்போது தனது வாகனத்திற்கு முன்னும் பின்னும் இரண்டு வாகனங்களில் காவல்துறையினர் வரவேண்டும் என்றும் சொல்கிறாராம். இது அவரது துறையினரிடையே எரிச்சலை ஏற்படுத்தி வருகிறதாம்.”** ●

**ஆவின் டெண்டர் முறைகேடு புகார்: வழக்கை தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்**



# பாராட்டி பேசு... பணத்தை வாங்கு...!

## – த.வெ.க நிவாரண லட்சணம்!

கரூரில் விஜய் பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வங்கிக் கணக்குகளில் த.வெ.க. சார்பில் அக்டோபர் 18, சனிக்கிழமை மாலை தலா ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப். 27-ஆம் தேதி விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. கடந்த 5-ஆம் தேதி கரூர் வந்த இக்குழுவினர், பல்வேறு தரப்பினரிடம் விசாரணை நடத்தினர். மேலும், இவ்வழக்கில் ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டிருந்த த.வெ.க. நிர்வாகிகள் 2 பேரை 2 நாள் காவலிலெடுத்து விசாரித்தனர்.

இதனிடையே, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி கடந்த 13-ஆம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீண்குமார் தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த 16-ஆம் தேதி இரவு கரூர் வந்தனர். அவர்கள் கரூர் பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையில் தங்கி, விசாரணையைத் தொடங்கினர்.

இதனிடையே, இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், காங்கிரஸ் சார்பில் தலா ரூ.2.50 லட்சம், ம.நீ.ம. சார்பில் தலா ரூ.1 லட்சம், வி.சி.க. சார்பில் ரூ.50 ஆயிரம் என பல்வேறு கட்சிகள் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இதேபோல, த.வெ.க. சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை த.வெ.க. தலைவர் விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண உதவியை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்காக, கரூரிலுள்ள ஒரு திருமண மண்டபத்துக்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை வரவழைத்து, அங்கு அவர்களுக்கு விஜய் நிவாரண உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இடம் தேர்வுசெய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக விஜய் வருகை தள்ளிப்போவதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் 41 பேர் உயிரிழந்த நிலையில், முதலில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு நிவாரணமாக, 27 பேரின் வங்கிக் கணக்குகளிலும் சனிக்கிழமை த.வெ.க. சார்பில் தலா ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டது. அதற்கான குறுஞ்செய்தி அவர்களது செல் போனுக்கு வந்தது. பின்பு மேலும் 10 பேரின் குடும்பத்தினருக்கும் த.வெ.க. சார்பில் நிவாரணம்







வழங்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தாலும், அந்தக் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் த.வெ.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது.


இதுதொடர்பாக கரூரில் விஜய் கூட்டநெரிசலில் தனது இரு மகள்களைப் பறிகொடுத்த வேலுச்சாமிபுரம் செல்வராணி, “என் பெண்கள் பழனியம்மா, கோகிலா இருவரும் கூட்ட நெரிசலில் இறந்துவிட்டனர். அதற்கான நிவாரணம் ரூ 20 லட்சம் என் அக்கவுண்டுக்கு வந்துவிட்டது. எவ்வளவு பணம் கொடுத்தாலும் என் பிள்ளைகளுக்கு ஈடாகாது” என்கிறார். செய்தியாளர் ஒருவர், ‘விஜய்க்கு என்ன சொல்ல விரும்புறீங்க?’ என கேட்க, “நம்பிக்கையோட இருங்க. இந்தத் தேர்தலில் நீங்கதான் ஜெயிப்பீங்க” என்கிறார்.

‘‘நாங்க யாருமே இவ்வளவு கிட்டப்போய் அவரைப் பார்க்க முடியாது. அந்தப் பெருமையை எங்க குடும்பத்துக்கு வாங்கிக் கொடுத்திருக்கான். அதுக்கு நஷ்டஈடா எங்க குழந்தையைக் கொடுத்திருக்கோம்” என்கிறார் பலியான 2 வயது குழந்தை குரு விஷாலின் சின்ன பாட்டி செந்தாமரை.

இதற்கிடையில் மொத்தமுள்ள 41 பேரில் இருவர் கணக்கில் மட்டும் இன்னும் பணம் போடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தங்களது அனுமதியின்றி சி.பி.ஐ. வழக்குத் தொடுக்கப்பட்டதாக உச்சநீதிமன்றத்தில் மனுப் போட்ட ஏமூர் செல்வராஜ், ஷர்மிளா இருவருக்குத்தான் பணம் போடப்படவில்லை என சில செய்திகள் வெளியாகின. நாம் விசாரித்தவரையில் கூட்ட நெரிசலில் இறந்துபோன தாமரைக்கண்ணன், தனுஷ்குமார் என்ற இருவரின் குடும்பத்துக்குத்தான் பணம் போடப்படவில்லை எனத் தெரியவந்தது.

இந்த இருவரது குடும்பத்திலும் நிவாரணப் பணம் அனுப்ப வங்கிக் கணக்கு கேட்கப்பட்டபோது, இறந்தவரின் தந்தை தனியாகவும், மருமகள் தனியாகவும் வங்கிக் கணக்கு அளித்ததால் யாருடைய கணக்குக்கு பணம் அனுப்புவது என்ற குழப்பத்தில் பணம் போடப்படவில்லையெனவும், சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி தீர்வு கண்டதும் பணம் போடப்படும் எனவும் த.வெ.க. தரப்பில் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரச்சனையைத் தீர்க்க இந்த இரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஜாய்ண்ட் அக்கவுண்ட் தொடங்கி பணம் போடுவதாகவும், இருவரும் பகிர்ந்து கொள்ளும்படியும் த.வெ.க. சார்பில் கூறப்பட்ட யோசனைக்கு தனுஷ்குமார், தாமரைக்கண்ணன் குடும்பத்தினர் ஒப்புக்கொண்டுள்ளனர். நாம் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரிடம் பேசியபோது, “அக்டோபர் 22-ஆம் தேதி எங்களோட ஜாய்ண்ட்




வங்கி கணக்கில் 20 லட்சம் நிவாரணம்

## மேற்கு வங்காளத்தில் 1,000 வாக்குச்சாவடி அதிகாரிகளுக்கு நோட்டீஸ் -தேர்தல் ஆணையம் நடவடிக்கை

# இறுதிச்சுற்று! முதல்வர் சுற்றுப்பயணம்!



**வ**டகிழக்குப் பருவமழை தீவிரமடைந்ததால் தென்காசி மாவட்டத்தில் 2 நாட்கள் மேற்கொள்ள விருந்த முதல்வரின் அரசுமுறைப் பயணம் ரத்து செய்யப்பட்டிருந்தது. ரத்து செய்யப்பட்ட அந்த 2 நாள் பயணத்தை மீண்டும் மேற்கொள்கிறார் ஸ்டாலின். தென்காசி மாவட்டத்தில் வருகிற 29 மற்றும் 30 ஆகிய 2 நாட்கள் சுற்றுப்பயணம் செய்யவிருக்கிறார் முதல்வர். இதற்கான அறிவிப்பு 23-ந் தேதி வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்த 2 நாள் அரசுமுறைப் பயணத்தில் மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களைத் துவக்கிவைக்கும் முதல்வர் ஸ்டாலின், 30-ந் தேதி பசும்பொன்னில் நடக்கும் முத்துராமலிங்க தேவர் குருபூஜையை யொட்டி அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்துகிறார். இந்த நிகழ்வில், ஸ்டாலினுடன் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மா.செ.க்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

**-இளையர்**



# எம்.எல்.ஏ. மறைவு!

**சே**ந்தமங்கலம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. பொன்னுசாமி, மாரடைப்பு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில்... சிகிச்சை பலனின்றி அக்டோபர் 23, வியாழனன்று கால மானார். அவருக்கு வயது 74. தற்போது எம்.எல்.ஏ.வாக இருக்கும் இவர், இதற்கு முன்னர் 2001, 2006ஆம் ஆண்டுகளிலும் சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**-நாகேந்திரன்**

அக்கவுண்ட் ஓபன் பண்ணினோம். பணம் போட்டிருவோம்னு சொன்னாங்க. இன்னைக்கு (அக்டோபர் 23) எங்க கணக்குல வந்துடும்" என நம்பிக்கையாகத் தெரிவித்தனர்.

விஜய் கரூர் கூட்டநெரிசல் சம்பவத்துக்குப் பின் கரூர் மாவட்ட மா.செ. மதியழகன் தலைமறைவான நிலையில், கரூர் கூட்டத்தில் சந்தேகத் துக்கு இடமான நபர்கள் தென்பட்ட தாகவும், கூட்ட நெரிசலில் கீழே விழுந்தவர்களின் கழுத்தில் மிதித்துக் கொன்றதாகவும், ஸ்ப்ரே அடித்து கழுத்துச் சங்கிலியை வைத்து நெறித்ததாகவும் சதிக் கதைகளை ஊடகங்களில் பேசித் திரிந்தவர் மதியழகனின் மனைவி ராணி.



மதியழகன் மனைவி ராணி

தற்போது பணம் போடுவதற்கு முன்பு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் போய் பார்த்து சமாதானப்படுத்தி, "சென்னை வரை போய் தலை வரை எல்லாம் பார்த்துப் பேசிட்டு வந்துட்டோம். நிவாரணத் தொகை இன்னும் இரண்டொரு நாள்ல வந்துடும். கிடைச் சதும் ஊடகங்கள் கேட்டா தலைவரைப் பாராட்டி நாலு வார்த்தை பேசுங்க" எனக்கூறி கேன்வாஸ் செய்யும் வேலையை த.வெ.க. கரூர் மா.செ. மதியழகனின் மனைவி ராணியும், பிற நிர்வாகி களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்தே கரூர் சம்பவத்தில் உயிரிழந்த வர்களின் குடும்பத்தினர், "என் பையன் உயிர் போனாலும் போய்ட்டுப் போவுது. என் மகனாட்டம் விஜய். அவர்தான் முதலமைச்சரா வரணும்" என ஒரு தாயும், என் மகன் படத்தை விஜய் மடியில் வைத்து ஒரு புகைப்படம் எடுத்துக்கிட்டா போதும்" என ஒரு தாய் பேசுவதும், கரூர் கூட்ட நெரிசலில் இரண்டு குழந்தைகளைப் பறிகொடுத்த ஒரு தாய், விஜய்க்கு நன்றி தெரிவிக்கும் காட்சி களும் அரங்கேறிவருகின்றன.

தற்போதுவரை அனைத்தும் சுமுகமாக விஷயங்கள் நடைபெற்று வருவதால், கரூர் விவகாரங்கள் முடிவுக்கு வந்ததும், மீண்டும் பிரச்சா ரங்களை தொடங்குவது குறித்தும், இமேஜுக்கு விழுந்த அடியை சரிசெய் வது குறித்தும் நிர்வாகிகளிடம் ஆலோ சிக்கத் தொடங்கியிருக்கிறாராம் விஜய்.

**-துரை.மகேஷ்**

# தலைமுறைகள் தாண்டி தலைசிறந்த சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300

7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.



Dr.சிவராஜ் சிவகுமார்

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**

## சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில்,
VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம்,
சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

## ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில்,
கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர்,
வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

## ஓசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம்
அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

## திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி**
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம்,
பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்**
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை**
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம்,
பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்**
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர்,
புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்**
2ம் தேதி,
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை**
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்**
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் &
புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை &
பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை**
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**தேனி**
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில்,
மதுரை ரோடு.

**திண்டுக்கல்**
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட்,
பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை**
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

**கடலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்**
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்**
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்**
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி**
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை**
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை**
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்**
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை**
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி**
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**கிருஷ்ணகிரி**
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

**ஆரணி**
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**ராம்நாடு**
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹராஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி**
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி**
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்**
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை ஆன்லைன் மூலம் பெற www.sivarajsiddha.com | G Pay Paytm 98427 22500



7 தலைமுறைகள்,
213 வருடங்கள்
பாரம்பரியம் கொண்ட
நிறுவனம்.

for more details

Advt

சிவா, கல்லிடைக்குறிச்சி

**கூட்டணிக்கு விஜய் வந்தாலும் பழனிச்சாமிதான் முதல்வர் என நடிகை கௌதமி கூறியிருக்கிறாரே?**

பீகாரில் தேர்தலுக்கு அப்புறம்தான் முதல்வர் யாரென முடிவுசெய்வோம் என்கிறார் அமித்ஷா. தமிழகத்தில் விஜய்யை கூட்டணிக்குள் இணைத்துக்கொள்ள மல்லுக்கட்டுகிறது பா.ஜ.க. பதற்றமிருக்காதா மனிதருக்கு? அதனால் முன்கூட்டியே கௌதமியைவிட்டு குரல்கொடுத்து, தான்தான் முதல்வர் வேட்பாளர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கிறார்போல!

மு.முஹம்மது ரபீக் ரஷாதீ, விழுப்புரம்

**'இந்துக்கள் அல்லாதவர்களின் வீடுகளுக்கு உங்கள் மகள் சென்றால், பெண் பிள்ளைகள் கால்களை பெற்றோர் உடைக்கவேண்டும்' என்று பா.ஜ.க. எக்ஸ் எம்.பி. பிரக்யா தாக்கூர் கூறியுள்ளாரே..?**

நியாயமாக இந்த தர்க்கத்தை நீட்டினால், இந்தியாவுக்கு வெளியில் சென்று சம்பாதிப்பவர்களும் அடங்காதவர்கள்தான். கிறித்துவ, முஸ்லிம் நாட்டில் போய் சம்பாதித்த காசில் இந்தியா செலவு பண்ணவேண்டுமா? வெளிநாட்டுக்குப் போய் சம்பாதித்து அனுப்புபவர்களின் காசை பாவக்காசு என்று இந்தியா வேண்டாம் என சொல்லிவிடுமா என பிரக்யாவிடம் கேட்கவேண்டும்.




அமெரிக்க நகரங்களில் ட்ரம்புக்கு எதிரான போராட்டம்

**எந்த நிலையிலும் உன் மனதை நீ அமைதியாகவே வைத்திருக்கப் பழகு!**
**அமைதியை விட நல்லதொரு ஆயுதமும் இல்லை; ஆறுதலும் இல்லை!**

என். இளங்கோவன்,
மயிலாடுதுறை.

**ஆணவக்கொலைகளைத் தடுக்க சட்டமியற்ற தமிழக அரசு கொள்கை முடிவெடுத்துள்ளதே..?**

சாதி ஆணவப் படுகொலைகளை தடுக்கும் நோக்கில் சட்டம் இயற்றுவதற்கான பரிந்துரைகளை அளிப்பதற்காக, உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார். அவர் பரிந்துரைகளை அளித்து சட்டம் வரட்டும். அதன் நடைமுறைப் பயன்பாடு எப்படியிருக்கிறதென பார்த்துவிட்டு கருத்துத் தெரிவிக்கலாம்.

நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி

**பாகிஸ்தானை உருவாக்கத் தெரிந்த எங்களுக்கு அதை அழிக்கவும் தெரியும் என ராஜ்நாத்சிங் கூறியிருக்கிறாரே?**

பாதி உண்மை என்பது இதுதான். பாகிஸ்தானை உருவாக்கியது சுதந்திர இந்திய அரசு இல்லை. நம்மை ஆட்சிசெய்த ஆங்கிலேயர். இரண்டாவது பாகிஸ்தானை அழிக்கவும் முடியும் என போகிறபோக்கில் சொல்கிறார். இந்திய ராணுவம், பாகிஸ்தானை தாக்கவோ, சேதாரம் விளைவிக்கவோ முடியலாம். பதிலுக்கு பாகிஸ்தானும் தாக்கும். கூடவே, அந்நாட்டின் கையிலும் அணு ஆயுதமிருக்கிறது. மறைமுகமாக துருக்கி, சீனா போன்ற நாடுகள் அதன் உதவிக்கு வரும். ஏதோ, கரும்பலகையில் எழுதிய எழுத்தை அழிப்பதுபோல் ஒரு நாட்டை அழித்துவிடவெல்லாம் முடியாது. வல்லரசாக இருக்கும் ரஷ்யாவே, உக்ரைன் போரில் சிக்கி தண்ணி குடித்துக்கொண்டிருக்கிறது என்பதை மறக்கவேண்டாம்.

சி. கார்த்திகேயன், சாத்தூர்

**நடிகர் ரஜினிகாந்த் இனி வெறும் கமர்ஷியல் படம் மட்டும்தான் போல் தெரிகிறதே?**

எப்போது ரஜினிகாந்த் கலைப்படங்களாக நடித்துத் தள்ளினார்? அவர் நடித்த படங்களில் ‘முள்ளும் மலரும்’, ‘ஜானி’, சமீபத்தில் ‘ஆறிலிருந்து அறுபதுவரை’ மாதிரி நடிப்புத் திறனைக் காண்பிப்பதற்கான படங்கள் சிலவும் இருந்தன. மற்றபடி அவர் எப்பவும் சூப்பர் ஸ்டார்தான். கமர்சியல் ஹீரோதான். தயாரிப்பாளர் காசில் சோதனை முயற்சிகள் கூடாதென்பது ரஜினியின் நம்பிக்கை என்பதால், அமிதாப்பச்சன் மாதிரி ரோல்களெல்லாம் ரஜினி முயற்சி செய்வார் என எதிர்பார்ப்பது வீண்.

ஆர். ஹரிகோபி, புதுடெல்லி

**மக்கள் நலன் என்பதற்கு உண்மையான அர்த்தம் என்ன?**

வரிச்சலுகைகளை கார்ப்பரேட்டுகளுக்குக் கொடுக்காமல் மக்களுக்குக் கொடுப்பது, புதிய சட்டங்கள், நடப்பிலிருக்கும் சட்டங்களுக்கு திருத்தம் என்ற பெயரில் இருக்கும் அடிப்படை உரிமைகளைப் பறித்து சர்வாதிகாரத்துக்கு அடித்தளம் போடாமல் இருப்பது, ஜனநாயகத்துக்கான வாக்குரிமையிலே கைவத்து பெயர்களை நீக்கிச் சேர்த்து விளையாடாமலிருப்பது. இப்படி அடுக்கியபடியே போகலாம்.




சு.மோகன், நாமக்கல்

**‘நோ கிங்ஸ்’ பேனருடன் அமெரிக்காவை அதிரவைத்த போராட்டங்கள் குறித்து?**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் போன்றில்லாமல், வழிவழியாக வரும் அரசர்களைப் போன்று நடந்துகொள்கிறார் என்ற எதிர்ப்புணர்வைக் காட்டும்விதமாக ‘நோ கிங்ஸ்’ என்ற பேனருடன் அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் நடந்த மக்கள் போராட்டங்கள் அமெரிக்காவையும், கூடவே ட்ரம்பையும் அதிரவைத்திருக்கின்றன. தலைநகரான வாஷிங்டன் உட்பட அமெரிக்காவின் 50 பெரிய நகரங்களில் நடந்த இந்தப் போராட்டம் ட்ரம்ப் கட்சியினருக்கான ஒரு எச்சரிக்கை மணி.

•



பிரகாஷ்



வேல்ராஜ்

# அம்பலமாகும் அண்ணா பல்கலைக்கழக ஊழல்!

## –சிக்கலில் தமிழக ஆளுநர்!

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஆளுநர் ரவி தமிழக அரசிடம் மோதல் போக்கையே கையாண்டுவந்தார். தான் நேரடியாக தலையிடக் கூடிய இடம் உயர்கல்வித் துறையின் கீழிருக்கும் பல்கலைக்கழகங்கள் மட்டும்தான் என்பதால், பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்கிற அடிப் படையில் உயர் கல்வித்துறையில், குறிப்பாக அண்ணா பல்கலைக்கழகத்தில் மூக்கை நுழைத்து பல்வேறு ஊழல்களுக்கு அவர் துணைபுரிந்து வந்தது தற்போது வெட்ட வெளிச்சமாகிவருகிறது.


தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டவுடன் அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பொறுப்பேற்ற வேல்ராஜ், அன்றுமுதல் ஆளுநரின் நேரடி ஊழியர் போல்தான் செயல்பட்டுவந்தார். நியமனங்கள், செயல்திட்டங்கள் என அனைத்தும் ஆளுநர் யாருக்கு தர வேண்டும் என்று தெரிவிக் கிறாரோ, அவர்களை திருப்தி படுத்தும் வகையிலேயே செயல்படுவது என்று, தமிழக அரசுக்கு எதிரான செயல்பாடுகளைக் கொண்டிருந்தார் துணைவேந்தர் வேல்ராஜ்.

இப்படி பனிப்போர் உச்சத்திலிருந்த நிலையில், அப்போதைய உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடியின் பரிந்துரையில் ரவிக்குமார் என்பவரை பொறுப்புப் பதி வாளராக நியமித்து உத்தரவிட்டது தமிழக அரசு. இதனைத் தொடர்ந்து வேல்ராஜ் தனது நண்பரான இளையபெருமாள் என்பவரை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத் துறையின் தலைவராக நியமித்தார். இதன்பிறகுதான் ஒரே ஆசிரியர் பல கல்லூரிகளில் பணியாற்றியது, போலியாக ஆவணங்கள் கொடுத்து தனியார் கல்லூரி கள் அங்கீகாரம் பெற்ற சம்பவம் வெளியேவந்தது.

பிராக்சி ஆசிரியர்கள் எனப்படும் தற்காலிகப் பேராசிரியர்களின் பிரச்சினை யை அறப்போர் இயக்கம் கையிலெடுக்க, வேல்ராஜின் செயல்பாடுகள் விமர்சனத் திற்கு உள்ளாகின. குறிப்பாக பத்து கல்லூரிகளில் இதுபோன்ற பேராசிரி யர்கள் இருப்பதை அறப்போர் இயக்கம் ஆதாரத்துடன் வெளியிட்டது.

இந்த அங்கீ காரம் சம்பந்தமாக வரும் விண்ணப் பங்களை ஆய்வு செய்து அண்ணா



ஆளுநர்
ரவி

## கடைசிவரை உயர்த்திக்கொண்டேயிரு... கைகளை மட்டுமல்ல; எண்ணங்களையும் நீ சாதிப்பாய் என்று!

பல்கலைக்கழக குழுவினரை அனுப்பி கள ஆய்வும் மேற்கொண்டு, அவர்களின் விண்ணப்பங்களை ஒப்பீடுசெய்து அங்கீகாரம் வழங்குவதற்கு பேராசிரியர் இளையபெருமாளே பொறுப்பு. ஆனால் இளையபெருமாளோ, இதுபோன்ற விண்ணப்பங்களை ஆய்வுசெய்து துணைவேந்தர் பார்வைக்கு அனுப்பிவைப்பார். அவர் இறுதி அனுமதியளிப்பதுதான் இங்குள்ள நடைமுறை. அந்த நடைமுறையில் சாதகமாக செயல்படாத பொறுப்புப் பதிவாளர் ரவிக்குமாரை மாற்றிவிட்டு பிரகாஷ் என்பரை வேல்ராஜ் பொறுப்புப் பதிவாளராக நியமனம் செய்தார்.

இதற்கு ஆட்சிமன்றக் குழுவில் எதிர்ப்பு கிளம்பியபோதும் அந்த எதிர்ப்பையும் மீறி பிரகாஷ் நியமனம் நடைபெற்றது. இது முறைகேடான விசயம் என்றும், சட்டத்திற்குப் புறம்பாக இவ்வாறு செய்யமுடியாது என்றும் ஆட்சிமன்றக் கூட்டத்தில் முழுமையாக எதிர்ப்பு தெரிவித்த ஆட்சிமன்ற உறுப்பினரும் சட்டமன்ற உறுப்பினருமான பரந்தாமன், எந்தவித காரணமும் இல்லாமல் ரவிக்குமார் நீக்கத்தை ஏற்கமுடியாது. இந்த ஆணையை ரத்து செய்யவேண்டும், முறையாக ஒப்புதல்பெறாமல் புதிய பதிவாளராக பிரகாஷை நியமிக்கமுடியாது என எதிர்ப்பு தெரிவித்தார்.

இதற்கிடையில், இதுபோலுள்ள பிராக்சி பேராசிரியர்களைக் கண்டுபிடிக்க வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது மத்திய அரசு. மத்திய அரசின் அகில இந்திய தொழில் நுட்பக்கழகம் இந்தியா முழுவதும் இதுபோன்ற பிரச்சினைகள் இருப்பதால் அதனை சரிசெய்ய ஆதார் எண்ணுடன், புதிய அடையாள எண்ணை பேராசிரியர்களுக்கு வழங்கிவருகிறது. தற்போதைய இந்த புதிய நடைமுறையால் இந்த சிக்கல்கள் தீரும் என்று நம்புகின்றனர் தனியார் கல்லூரியைச் சார்ந்த பொறுப்பாளர்கள்.

இந்நிலையில், தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையில் அறப்போர் இயக்கத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அவர்கள் வழக்கு பதிவுசெய்து முதற்கட்ட விசாரணை துவங்கியுள்ள நிலையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் நடக்கும் முறைகேடுகளில் முக்கிய பங்காற்றிய வேல்ராஜ் சமீபத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டார். ஆனால், ஆளுநர் ரவியோ இந்த பணிநீக்கத்தை ஏற்காமல் ரத்துசெய்துள்ளார்.

அதேபோல், மத்தியிலிருக்கும் சிலரின் ஆசியுடன் தற்போது நாகலாந்தில் இருக்கும் என்.ஐ.டி.யில் இயக்குனராக பணியாற்றிவருகிறார் வேல்ராஜின் நண்பரான இளையபெருமாள். இளையபெருமாளை அந்த பதவியிலிருந்து நீக்கவும், இந்த அனைத்து பிரச்சினைக்கும் காரணகர்த்தாவாக இருந்தது இளைய பெருமாள்தான் என்பதால் அவர்மீது நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைத்துள்ளது தமிழக அரசு.

தமிழக அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அறப்போர் இயக்கத்தினர், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த சூழலில், பிராக்ஸி பேராசிரியர்கள் நியமனம் தொடர்பாக எழுந்த ஊழல் குற்றச்சாட்டில் வேல்ராஜ் உட்பட 11 பேருக்கு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பியுள்ளது



எம்.எல்.ஏ. பரந்தாமன்

“இதுபோன்ற ஒரு சம்பவம் எதிர்காலத்தில் நடைபெறவேகூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆகவே, டி.வி.ஏ.சி. விசாரணை வளையத்திற்குள் இருக்கும் வேல்ராஜ், இளையபெருமாள், எம். சித்ரா, சிலோ எலிசபெத், ஜி. ரவிக்குமார், ஜே. பிரகாஷ், கிரிதேவ், மார்ஷல் ஆண்டனி, வி. மாலதி, பிரகதீஸ்வரன், சிலாஸ் சற்குணம் ஆகிய 11 பேரையும் அவர்கள் அடிஷனலாக பார்த்துவந்த பதவியிலிருந்து நீக்கம் செய்து அண்ணா பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு தற்போது உத்தரவிட்டுள்ளது. மேலும், இப்பிரச்சனையில் லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணைக்கு உதவ ஆட்சிமன்றக் குழு தயாராக உள்ளது” என்றார் எம்.எல்.ஏ. பரந்தாமன்.

விரைவில் புதிய துணைவேந்தரையோ அல்லது சிறப்பு அதிகாரியையோ நியமித்து, பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறினால்... சீரழியப்போவது மாணவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, இந்திய அளவில் புகழ்பெற்றிருக்கும் அண்ணா பல்கலைக்கழகத்தின் தரமும்தான்.

-ஸ்ரீ வர்மா

## துணிச்சல் மிகுந்த பெண்!

**நாடக உலகில் கலக்கிக்கொண்டிருந்த கே.பாலசந்தர் எழுதி, இயக்கிய முதல் படம் 'நீர்க்குமிழி'. அவர் படத்தில் முதல் கதை நாயகி நான்தான் என்பது பெருமைக்குரிய விஷயம். என்னை இயக்கிய அரிய தருணங்களை அவர் சொன்னதை அப்படியே தருகிறேன்...**

" 'நீர்க்குமிழி' படத்தில் படகில் செல்வதாக ஒரு காட்சியமைக்கப்பட்டிருந்தது. ஆனால் சௌகார் அவர்களோ, அந்தக் காட்சியில் நடிக்கத் தயங்கினார். உடனே நான், 'உங்களுக்குப் பதிலாக டூப் போட்டு எடுத்துக்கொள்கிறேன்' என்று அவரிடம் தெரிவித்தது தான் தாமதம்... சற்று நேரத்தில் 'நானே நடிக்கிறேன்' என்று நடிக்கத் தொடங்கிவிட்டார்.

தனக்குப் பதிலாக பிறர் நடிப்பதை சகிக்க முடியாத நிலையில், அது எப்படிப்பட்ட ஆபத்தான காட்சியானாலும், தானே நடிக்க வேண்டும் என்ற தனித்தன்மை அவரிடம் எப்போதும் இருந்தது.

'நாணல்' நாடகமாக நடத்தப்பட்டபோது, அதில் நடித்திராத சௌகார், 'நாணல்' படத்தில் நடித்தது அனைவருக்கும் நினைவிருக்கலாம். 'பாமா விஜயம்' படத்தில் அவர் ஏற்றது நகைச்சுவை வேடம். அதிலும் அசத்தினார். புதிதாக ஆங்கிலம் கற்றுக்கொண்டிருக்கும் சௌகார், தனக்கும் ஆங்கிலம் தெரியும் என்பதை தெரிவிக்கும் வகையில் அதாவது பெருமையடித்துக்கொள்ளும் வகையான காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

'மேட்' விரிக்கிறேன்



'இரு கோடுகள்' படத்தில் ஜெமினிகணேசனுடன் நான்

சௌகார் ஜானகி லைஃப் ரிலே! 3

# நான் பட்டு மாமி பேசுறேன்...



உட்காருங்கள்! வீட்டிலே 'ரேட்' அதிகம், அதுக்காகத்தான் 'கேட்' வளர்க்கிறேன் என்பார். அப்போது அவரைச் சீண்டிவிடும் நோக்கில் 'அதுக்கு டிராப்தான் வேணும்' என்பார் காஞ்சனா. டிராப்பா? என்று கேட்டு சௌகார் விழிப்பது வேடிக்கையாக இருக்கும்.

ஜோசப் ஆனந்தன் எழுதிய 'இரு கோடுகள்' நாடகத்தை படமாக்கும் முயற்சியில் இறங்கினோம். நகைச்சுவையாக நடித்தது போதும் என்கிற அளவில் சௌகார் அவர்களை, 'கலெக்டர் ஜானகி'யாக நடிக்க வைத்தோம். ஆனால் அவரோ, அந்த கதா பாத்திரமாக மாறி, கலெக்டர் ஜானகியாகவே வாழ்ந்து காண்பித்தார். ஒரு கலெக்டருக்குரிய மிடுக்கும், பேச்சும் அவரிடம் இம்மி குறையாது காணப்பட்டன. லைஃப் ஃபைல் சௌகார் அவர்களும், ஜெமினி அவர்களும் உரையாடும் காட்சியை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

வங்காளத்திலும், பின்னர் இந்தியிலும் வெளிவந்த 'மம்தா' படத்தை தமிழில் தயாரிக்கத் திட்டமிட்டார் சௌகார். அந்தப் படத்தை டைரக்ஷன் செய்யும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார். அதுதான் 'காவியத் தலைவி' படமாக உருவானது. ஒரு தயாரிப்பாளர் என்ற முறையில் அவர் என்னிடம் எதுவும் கேட்டதில்லை. படப் பிடிப்புக்காக நான் கேட்டதையெல்லாம் உடனுக்குடன் செய்து தருவார். அது முழுக்க, முழுக்க செட் போட்டு எடுக்கப்பட்ட படம். படத்தின் தயாரிப்பாளர் அவரேதான் என்றபோதும், பத்து... பதினைந்து நிமிடங்கள் தாதமதாக வருவதாகயிருந்தால் கூட உடனே எனக்குத் தகவல் கொடுத்து விடுவார்.

'காவியத் தலைவி' எனக்குப் பிடித்த படம். கணவனையே ஒரு மனைவி சுட்டுக் கொல்கிறாள் என்ற விஷயமே புதுமையாக இருந்த நேரம் அது. சௌகார் ஜானகியும், எம்.ஆர்.ஆர்.வாசுவும் மிகவும் சிறப்பாக நடித்திருந்தனர்.

'காவியத் தலைவி' படத்தைப் பொறுத்தவரை சௌகார் அவர்கள், ஒரு சிறந்த தயாரிப்பாளராக என்னிடம் நடந்து கொண்டதை இப்போது நினைத்தாலும், அவரது நாகரிக உள்ளத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

சௌகார் அவர்களின் விருந்தோம்பல் பண்பைச் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். 'நீர்க்குமிழி' படப்பிடிப்பு அருணாசலம் ஸ்டுடியோவில் நடந்துகொண்டிருந்தபோது, தன்னோடு மதிய உணவு உண்ணும்படி என்னை அழைப்பார். நானும் பலமுறை அவரது சுவையான சமையலை பெரிதும் விரும்பிச் சாப்பிட்டிருக்கேன். அப்போதெல்லாம் வீட்டில் என் மனைவியிடம், அவளது சமையலைப் பற்றி ஏதேனும் குறை சொல்வதுண்டு. அப்படி நான் குறை சொல்லும்போது... 'சௌகார் அம்மாவின் சமையலை சாப்பிட்டு உங்களுக்கு நாக்கு நீளமாகிவிட்டது' என்று என் மனைவி வேடிக்கையாகச்



—எழுத்தாக்கம்
கலைமாமணி
சபீதா ஜோசப்

www.nakkheeran.in

'நீர்க்குமிழி' படதில் நாகேஷுடன் -நான்



வந்துபோகும் திரையுலகில், ஏதோ வந்தோம், போனோம் என்றில்லாமல், இன்னும் தான் ஒரு நடிகை என்ற மதிப்போடு, மரியாதையோடு வாழ்ந்துவருபவர் இவர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நான் டைரக்ட் செய்த 'தில்லுமுல்லு' படத்தில் நகைச்சுவை கேரக்டரில் நடிக்கும்படி சௌகார் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவரும் மனமுவந்து ஒப்புக்கொண்டு சிறப்பாக அந்த பாத்திரத்தில் நடித்து மகிழவைத்தார்.

சௌகார் அவர்களிடம் உள்ள சொல்வார். வீட்டை அழகாக வைத்திருப்பது எப்படி என்று சௌகார் அவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும். அலங்காரப் பொருட்களாக அங்கங்கே இடம்பிடித்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பொருளுமே கவிதை சொல்லும்! வரவேற்பறையில் நான் கண்ட சிறு வாசகம்: 'I am not hard of hearing... I ignore you!'.

அவர் என்னதான் வெளியுலகில் சிரித்து மகிழ்வாகக் காட்டிக்கொண்டாலும் அவரது உள்மனம் இசைக்கும் சோககீதத்தின் மெல்லிய ஒலியையும் கூடவே கேட்க முடிகிறது. வாழ்க்கையில் எத்தனையோ சாதனைகளைக் கண்டு, கூடவே சோதனைகளையும் ஒருமுகமாகத் தாங்கிக்கொண்டு எதிர்நீச்சலையும் இன்முகத்தோடு போட்டுக்கொண்டு வாழ்ந்து காட்டும் இவரைப் போன்ற துணிச்சல் மிகுந்த பெண்மணியைக் காண்பது அபூர்வம்தான். பாரதி கண்ட புதுமைப் பெண்... இவரைப் போல்தான் இருக்கவேண்டும்.

என்னை இயக்கியவர்களில் சௌகார் அவர்களும் ஒருவர் என்பதை பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். எத்தனையோ பேர் மற்றொரு தனிச்சிறப்பு, அவர் ஆங்கிலம் பேசுவது. அவர் ஆங்கிலம் பேசுவதைக் கேட்டுக்கொண்டேயிருக்கலாம். உச்சரிப்பில் உள்ள இனிமை, சினிமா, வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசும் திறன், இவை சௌகார் அவர்களுக்கு கைவந்த கலை. வெகுசரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர்களில் சௌகார் அவர்களும் ஒருவர்" -இவை என்னைக் குறித்து 'இயக்குநர் சிகரம்' கே.பாலசந்தர் சொன்ன வார்த்தைகள்.

## காலம் கடந்து நிற்கும் பாடல்கள்!

**கா**வியத் தலைவி சௌகார் ஜானகி நடித்த படங்களின் பல பாடல்கள் காலம் கடந்து இந்த தலைமுறையும் ரசித்து முணுமுணுக்கும் படியானவை. அந்தப் பாடல்களில் சில...

மாலைப் பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி
புன்னகை மன்னன் பூவிழி கண்ணன் ருக்மணிக்காக
பார்த்த ஞாபகம் இல்லையோ
ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா
மியாவ் மியாவ் பூனைக்குட்டி
இறைவா உன் மாளிகையில் எத்தனையோ ஒளிவிளக்கு
படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா
கையோடு கை சேர்க்கும் காலங்களே...
அத்தானின் முத்தங்கள் அத்தனையும் முத்துக்கள்

**ச**ரி, இனி சின்ன வயதில் நான் எப்படி? என் படிப்பு, நட்பு, காதல், திருமணம், சினிமா பற்றியெல்லாம்...

**(பேசுறேன்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in



ஓடினால் துரத்தும்; துரத்தினால் ஓடும்... துன்பம்!

# உண்மையின் குரல் உங்கள் கையில்!

**அனைத்து துறை
தகவல்களையும் அதன்
உண்மைத்தன்மை
மாறாமல் உடனுக்குடன்
வழங்கும்
நக்கீரன் இணையம் -
Youtube சேனல்கள்!**







**நக்கீரன் குழும வெளியீடுகளை
ஆன்லைனில் ஆர்டர் செய்ய
QR Code Scan செய்யுங்கள்..!**

**தொடர்புக்கு
044-4399 3007**

www.nakkheeran.in

Advt




# ஊழலில் கொழுத்த கிராம ஊராட்சிகள்! பகீரூட்டும் பெருமுகை!

**த**மிழ்நாட்டில் கிராம ஊராட்சிகளில் அதிகளவில் ஊழலும், மோசடியும் நடந்துள்ளது. தடுக்கவேண்டிய அதிகாரிகள், பங்கு வாங்கிக்கொண்டு எதையும் கண்டுகொள்வதில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்றனர் சமூக ஆர்வலர்கள்.

வேலூர் த.மு.மு.க. -ம.ம.க. மாநில செயலாளர் ஏஜாஸ் அகமது நம்மிடம், “கிராம பஞ்சாயத்துகளில் அதிகளவு முறைகேடுகள் நடைபெறும் ஊராட்சிகள் குறித்து புகார்கள் வந்தால், ஆர்.டி.ஐ. போட்டு ஆய்வு நடத்தி, தவறுகளை வெளிப்படுத்தி நடவடிக்கை எடுக்கச் சொல்லிவருகிறோம். அதன்படி வேலூர் மாநகராட்சி எல்லைக்கு அடுத்துள்ள பெருமுகை பஞ்சாயத்தில் அதிகளவில் ஊழலும், மோசடியும் நடப்பதறிந்து ஆய்வு நடத்தினோம். அதில், புதிய வீட்டுமனை வாங்குபவர்கள் வீடு கட்ட வாங்கிய பஞ்சாயத்து அனுமதிகளில் பல்லாயிரம் ரூபாய் லஞ்சமாக வாங்கப்பட்டுள்ளது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் கட்டியுள்ள இரண்டு வீட்டுக்கே பஞ்சாயத்து அனுமதி வாங்கவில்லை. தூய்மை பாரதம் இயக்கம், திடக்கழிவு மேலாண்மை சார்பில் கழிவுநீர் உறிஞ்சுகுழி, பிள்ளையார் குப்பம், அண்ணாநகரில் கட்டப்பட்டது. அதனை புதிய வீட்டுமனைப் பிரிவு போட்டவர்கள், இடித்து சேதப்படுத்தியுள்ளனர். இதன்மீது நடவடிக்கை எடுக்காதிருக்க லட்சத்தில் பணம் வாங்கியிருப்பதாகக் கூறுகிறார்கள். அதேபோல் அந்த ஊராட்சியில் ஏ.எஸ்.அப்துல்நஜீர் என்கிற ஒப்பந்ததாரருக்கு மட்டும் அதிக ஒப்பந்தங்கள் தரப்பட்டுள்ளதை ஆய்வில் கண்டறிந்தோம். முறையான ஆவணப் பராமரிப்பு இல்லாமலேயே இவ்வளவு கண்டறிந்துள்ளோம். அவர்கள் முறையான ஆவணங்கள் பராமரித்திருந்


ஆய்வுப் பணியில்...

www.nakkheeran.in

தால் இன்னும் பல தவறுகளை கண்டறிந் திருப்போம்” என்றார்.

வழக்கறிஞர் பயாஸ் அகமதுவிடம் பேசிய போது, “பெருமுகை ஊராட்சி மன்றத் தலைவர் புஷ்பராஜ், 2021-ல் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும்போது, தனக்கும், தனது மனைவிக்குமான சொத்து மதிப்பு 14.25 லட்சம் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆவின் நிறுவனத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றவர் இவர். ஊராட்சி மன்றத் தலைவராக பதவிக்கு வந்து நான்காண்டு காலத்துக்குள் 5 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. அதனால் தகவல் ஆணையத்தின் மூலமாக ஆய்வு செய்ய மனு செய்தோம். வேலூர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் தந்த பதிலில், தலைவர் இன்னும் அனுமதி தரவில்லை எனச்சொன்னார்கள். இதுகுறித்து மேல்முறை யீடு செய்தபின் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கச்சொன்னார்கள், அப்போதும் அதிகாரிகள் அசைந்துகொடுக்கவில்லை. விடாமல் போராடி உத்தரவு வாங்கி ஆய்வில் ஈடுபட்டோம்.

நாங்கள் ஆய்வு செய்ததில், வீட்டுவரி, தொழில்வரி கட்டுபவர்களுக்கு போலி வரி ரசீதுகளை தந்துள்ளார்கள். இதிலேயே பல லட்சம் மோசடி. அதேபோல் சென்னையில் சொந்த வீட்டில் வசிக்கும் தனது மகள் அர்ச்சனா பெயரில் பெருமுகையில் இலவச வீட்டுமனைப் பட்டா 2023, செப்டம்பர் மாதம் வாங்கிய ஊ.ம.த., அந்த இடத்தினை 2024 பிப்ரவரியில் தானமாகத் தன் பெயருக்கு வாங்கியுள்ளார். 1076 சதுரஅடியுள்ள அந்த இடத்தின் மதிப்பு 35 லட்சம். பல லட்ச ரூபாய் மதிப்புள்ள 5 வீடுகள் அவருக்கு சொந்தமாக உள்ளதை கண்டறிந்துள்ளோம். அவருக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய் படி தான் அரசு சார்பில் தரப்படுகிறது. அப்படிப்பார்த்தால் 4 ஆண்டுகளுக்கு 1 லட்சம் ரூபாய் அளவுக்குதான் வாங்கியிருப்பார். அப்படியிருக்க அவருக்கு 5 கோடிக்கு சொத்துக்கள் எப்படி வந்தது? எல்லாமே ஊழல் தான். அதனால் இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சியருக்கு, விஜிலென்சுக்கு மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை” என்றார்.


ஏஜாஸ் அகமது


பயாஸ் அகமது

கடந்த அக்டோபர் 6ஆம் தேதி ஆய்வில் ஈடுபட்ட பெருமுகை சுரேஷ் நம்மிடம், “நானும் வழக்கறிஞர் மணிபாரதியும் ஆய்வு செய்தபோது, 2010-2024 வரையில் இந்த ஊராட்சியில் வீடுகள் கட்ட அனுமதி தந்த கோப்புகளைக் கேட்ட போது, கோப்புகள் இல்லையென்று அதிர்ச்சி தந்தார்கள். 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள குப்பை அள்ளும் வண்டிக்கு 95 ஆயிரம் ரூபாய்க்கு பழுது பார்த்ததுன்னு செலவு எழுதியிருக்காங்க. வீடே இல்லாத இடத்துக்கு வீடு இருக்கறதா வரி போட்டிருக் காங்க. பல ஆவணங்கள் இல்லை, அதைக் கேட்டதற்கு ஒரு வாரத்தில் தருகிறோமெனச் சொன்னார்கள். ஜூலை மாதம் ஆய்வு செய்த மற்றொருவருக்கும் இரண்டு நாளில் ஆவணங்கள் தருகிறேன் எனச்சொன்னவர்கள் இதுநாள் வரை தரவில்லையாம். 15 நாட் களுக்கு ஒருமுறை டெபுடி பி.டி.ஓ.வும், 30 நாட் களுக்கு ஒருமுறை பி.டி.ஓ.வும் ஆய்வு செய் திருக்கணும். அதை அவங்க முறையா செய்யல, இதுகுறித்தெல்லாம் மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்” என்றார்.

வேலூர் மாவட்ட ஊராட்சிகள் உதவி இயக்குநர் திருமாலிடம் இதுகுறித்து கேட்ட போது, “அவர்களுக்கும் ஊராட்சி மன்றத் தலைவருக்குமிடையே ஏதோ பிரச்சனைகள் நடந்துக்கிட்டு இருக்கு. எனக்கும் புகார்கள் வந் துள்ளது, ரெக்கார்டுகளை ஆய்வு செய்துக் கிட்டிருக்கோம்” என முடித்துக் கொண்டார்.

இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள் என்றார் காந்தி. உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் தந்தார் ராஜீவ்காந்தி. அந்த முதுகெலும்பை, ஊழல், மோசடி போன்றவை அரித்துக்கொண்டு இருக்கின்றன.

**-து.ராஜா**

**கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில் கடலூர், காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளை கடந்த இதழில் பார்த்தோம். மிச்சமுள்ள ஐந்து தொகுதிகளின் நிலவரம் இது.**

***குறிஞ்சிப்பாடி:*** ஸ்டார் தொகுதி. அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இந்த தொகுதியில் போட்டியிட்டு வெற்றியும் தோல்வியும் சந்தித்தவர். ஆனாலும் குறிஞ்சிப் பாடியைவிட்டு அவர் வேறு தொகுதிக்கு மாறியதில்லை. இந்த முறை அவர் தொகுதி மாறலாம் என்ற மனநிலையில் உள்ளதாக கட்சி முன்னோடிகள் கிசுகிசுக்கிறார்கள். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அமைச்சர் சிதம்பரத்தைத்தான் தேர்ந்தெடுப்பார் என்கிறார்கள் கட்சியினர். அமைச்சர் தொகுதி மாறினால் குறிஞ்சிப்பாடியில் அவரது உறவினரும் ஒ.செ.வுமான சிவக்குமாருக்கு வாய்ப்பு அதிகம். அ.தி.மு.க. சார்பில் வடக்கு மாவட்டச் செயலாளர் சொரத்தூர் ராஜேந்திரன் இந்த தொகுதிமீது மிகுந்த ஆவலாக உள்ளார். சமட்டிக்குப்பம் ஏ.கே.சுப்பிரமணியன், ஒ.செ. கோவிந்தராஜ் போன்றவர்களுக்கும் கோதாவில் குதிக்க ஆசையுள்ளதாம்.

***நெய்வேலி:*** தொடர்ந்து எம்.எல்.ஏ.வாக வெற்றிபெற்று வருபவர் சபா ராஜேந்திரன். இந்த முறையும் அவருக்கே தலைமை வாய்ப்பளிக்கும் நிலை உள்ளது. தி.மு.க. கூட்டணியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் நெய்வேலி தொகுதிமீது விருப்பமாக உள்ளார். தற்போது பண்ருட்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக




பிரேமலதா

வேல்முருகன்

சி.வி.கணேசன்

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

**மனஉறுதி இல்லாதவனிடம் எத்தனை ஒட்டகம் இருந்தாலும், பாலைவனத்தைக் கடக்க இயலாது!**

உள்ளதால் அவருக்கு மீண்டும் பண்ருட்டியையே தி.மு.க. தலைமை கைகாட்டும் என்கிறார்கள். அ.தி.மு.க. சார்பில் சொரத்தூர் ராஜேந்திரனுக்கும் நெய்வேலியில் நிற்க ஆசை. முன்னாள் எம்.எல்.ஏ. சிவசுப்பிரமணியம் போன்றவர்களும் போட்டிக்கு தயாராகி வருகின்றனர்.

**விருத்தாசலம்:** இங்கு கடந்த முறை தி.மு.க. கூட்டணிக் கட்சியான காங்கிரஸின் ராதாகிருஷ்ணன் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். இந்த முறையும் காங்கிரஸுக்கே தொகுதி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. அப்படி கிடைத்தால் அந்த கட்சியில் சீட்டுக்குப் போட்டி கடுமையாக இருக்கும். ஏற்கனவே காங்கிரஸ் கட்சியில் நின்று தோல்வியுற்றவர் நீதிராஜன். இவரது தந்தை தியாகராஜன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். தந்தையைப்போல் தானும் ஒருமுறையாவது சட்டமன்ற உறுப்பினராக வேண்டும் என்ற நம்பிக்கையிலுள்ள நீதிராஜன் காங்கிரஸில் சீட்டுக்கு மோதுவார். இந்த முறை தி.மு.க.வுக்கே தொகுதியை ஒதுக்கவேண்டும் என்று கட்சியினர் தலைமையிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதன்படி தி.மு.க. இங்கு போட்டியிட்டால், 2011-ல் இங்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு மாற்றப்பட்ட தொ.மு.ச. தங்க.ஆனந்தன் மீண்டும் விருத்தாசலத்தை குறிவைத்துள்ளார். அதேபோல் இளைஞரணியைச் சேர்ந்த கணேஷ்குமார், மறைந்த முன்னாள் எம்.எல்.ஏ. குழந்தை தமிழரசனின் புதல்வியும் நகரமன்ற தலைவருமான டாக்டர் சங்கவி முருகதாஸ், உதயநிதிக்கு நெருக்கமான எக்ஸ் எம்.எல்.ஏ. பி.வி.பி. முத்துக்குமார், அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.விற்கு தாவிய எக்ஸ் எம்.எல்.ஏ. கலைச்செல்வன் என்று தி.மு.க.வில் பட்டியல் நீண்டுசெல்கிறது.

அதேநேரத்தில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான சி.வி.கணேசன் யாரை கை காட்டுகிறாரோ அவருக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும். தி.மு.க. கூட்டணியிலுள்ள வி.சி.க.வும் பொது தொகுதியை பெற்று அதில் நின்று வெற்றி பெறவேண்டும் என்று விரும்புகிறது. விருத்தாசலம் கிடைத்தால் வேட்பாளராக நிற்பதற்கு கட்சி மாநில பொறுப்பிலுள்ள அன்வர் பாஷா தயாராக உள்ளார். அ.தி.மு.க. சார்பில் மாநிலப் பேரவை துணைச் செயலாளர் அருளழகன், ரவீந்திரன் ரெட்டியார், எக்ஸ் எம்.எல்.ஏ. ஆர்.டி.ஆர்.






மகன் ரமேஷ், அட்வகேட் விஜய குமார், முன்னாள் நகர சேர்மன் சந்திரகுமார் இப்படி அ.தி.மு.க.விலும் சீட்டுக்கு போட்டி நிலவுகிறது. எந்த கட்சியோடு கூட்டணி வைத்தாலும் விருத்தாசலம் தொகுதிமீது தே.மு.தி.க. தலைவி பிரேமலதாவுக்கு தனி கண் இருக்கிறது.

**பண்ருட்டி:** தி.மு.க. கூட்டணியில் வெற்றிபெற்றுள்ள வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் சில தினங்களுக்கு முன்பு விருத்தாசலத்தில் நடைபெற்ற தனது கட்சிக் கூட்டத்தில் பேசியபோது, பண்ருட்டி தொகுதியை தேவையான அளவுக்கு வளர்ச்சியடையச் செய்துள்ளேன். எனவே வரும் தேர்தலில் பண்ருட்டி தொகுதியில் நிற்கப்போவதில்லை. விருத்தாசலம், நெய்வேலி, புவனகிரி உட்பட ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிடத் தயாராக உள்ளேன் என்றுள்ளார். வேல்முருகன் தொகுதி மாறினால் தி.மு.க. சார்பில் மறைந்த எக்ஸ் எம்.எல்.ஏ. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியின் மகன் வழக்கறிஞர் வெங்கட்ராமன், மாவட்ட பொருளாளர் ஆனந்திசரவணன் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்பு

**சினம் வரும் என நினைத்துச் சீண்டியவருக்கு,
நீ தரும் புன்னகையே பக்குவம்!**


வழக்கறிஞர் விஜயகுமார்


சொரத்தூர் ராஜேந்திரன்


சபா ராஜேந்திரன்

கிடைக்கலாம். அ.தி.மு.க. சார்பில் இந்தத் தொகுதியில் 2011-ல் வெற்றிபெற்ற சத்யா பன்னீர் செல்வம், மீண்டும் இங்கு போட்டியிட எடப்பாடியாரை அடிக்கடி தரிசனம் செய்துவருகிறார். கடந்த முறை இந்த தொகுதியில் போட்டியிட்டு வேல்முருகனிடம் தோல்வியடைந்த சொரத்தூர் ராஜேந்திரனுக்கு மீண்டும் இங்கே கட்சித் தலைமை வாய்ப்பு வழங்க சான்ஸ் உண்டு. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, காலத்தில் மாவட்ட அரசியலில் கொடிகட்டிப் பறந்த எம்.சி.தாமோதரன் தம்பிதான் முன்னாள் அமைச்சர் சம்பத். பழைய முகமான தாமோதரனுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்கலாம் என்கிறார்கள். 2011-ல் தே.மு.தி.க. சார்பில் வெற்றிபெற்றவர் சிவக்கொழுந்து. பலமான கூட்டணியில் கட்சி இடம்பெற்றால், மீண்டும் நிற்பதற்கு தயாராக உள்ளார் சிவக்கொழுந்து. அதேபோல் மாவட்ட அவைத் தலைவர் ராஜாராமுக்கும் சீட்டுப் பெற ஆசையுள்ளதாம்.

**திட்டக்குடி:** மாவட்டத்தின் மேற்குக் கடைக்கோடியிலுள்ள மிகவும் பின்தங்கிய தொகுதி. இங்கு தி.மு.க. சார்பில் கடந்த 2016, 2021 ஆகிய இருமுறை தொடர்ந்து வெற்றிபெற்று அமைச்சராக உயர்ந்தவர் சி.வி.கணேசன். அரசின் திட்டங்களை அதிக அளவு கொண்டுவந்து வளர்ச்சி பெற்ற தொகுதியாக மாற்றியுள்ளார். மீண்டும் கட்சித் தலைமை அவருக்கே வாய்ப்பளிக்கும் நிலையுள்ளது. திட்டக்குடி மங்களூர் தொகுதியாக இருந்தபோது சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற இளமங்கலம் கிருஷ்ணனின் மகன் செல்வக்குமார், முதல்வர், துணை முதல்வர் ஆகியோரிடம் நெருக்கமாக உள்ள. இவரும் தனது தந்தையைப் போல் மக்கள் பணியாற்ற கட்சிக் தலைமையிடம் சீட்டு கேட்க ஆவலோடு உள்ளார். அ.தி.மு.க.வில் எக்ஸ் எம்.எல்.ஏ. பெரியசாமி மகன் அய்யாசாமி, இறையூரில் இ-சேவை மையம் மூலம் மக்களிடம் நெருக்க மாகவுள்ள ராஜேந்திரன், மகளிரணியைச் சேர்ந்த எக்ஸ் கவுன்சிலர் பொன்னேரி பத்மாவதி, எக்ஸ் மாவட்ட கவுன்சிலர் சுப்பிரமணியன், எக்ஸ் எம்.எல்.ஏ. பெண்ணாடம் ராமு ஓய்வுபெற்ற வட்டாட்சியர் பாலு இப்படி பெரும் பட்டியலே நீளுகிறது. அ.தி.மு.க.வில். இந்தத் தொகுதியில் காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து மறைந்தவர் புரட்சிமணி. அவருக்குப் பிறகு தற்போது காங்கிரசுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த முறை கிடைத்தால் இறையூர் ஊராட்சிமன்ற முன்னாள் தலைவி செல்வமணி, கந்தசாமி மகன் கருப்பையா மூப்பனார், ஓய்வுபெற்ற ஆசிரியர் தங்க வீரப்பன் ஆகியோர் சீட்டு பெறுவதற்கு ஆவலாகவே உள்ளனர்.



எந்த கட்சியில் கூட்டணி வைத்தாலும் திட்டக்குடி தொகுதியைப் பிரேமலதா கேட்பார் என்ற நம்பிக்கை ஏற்பட்டதன் விளைவாக, அந்த கட்சியின் மா.செ. உமாநாத், விருத்தாசலம் நகர கவுன்சிலர் ரமேஷ், கம்மாபுரம் மத்திய ஒ.செ. வீரமணி, தொழுதூரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜோசப் போன்றவர்களுக்கு கட்சியில் சீட்டு கேட்கும் ஆசை தோன்றியுள்ளது. கடந்த முறை அ.தி.மு.க. கூட்டணியில் பி.ஜே.பி. சார்பில் தடா பெரியசாமி வேட்பாளராக நின்று கணேசனிடம் தோற்றுப் போனார். தடா பெரியசாமி அ.தி.மு.க.வுக்குச் சென்றுவிட்டதால் பா.ஜ.க. சார்பில் கட்சியின் மாவட்ட தலைவராக உள்ள எக்ஸ் எம்.எல்.ஏ. தமிழழகன், இறையூர் விநாயகமூர்த்தி போன்றவர்கள் கூட்டணி சார்பில் இந்த முறை சீட்டுப் பெறுவதில் முனைப்பாக உள்ளனர்.

**-எஸ்.பி.எஸ்.**

www.nakkheeran.in



டயா பூஸ்டர் ™
Dia BOOSTER
a Food Supplement
IMPROVES ENERGY, STRENGTH, STAMINA
சர்க்கரை நோயாளிகளின் அக்கறையான உணவு
கேப்சூல் வடிவில்
MONEY BACK 100% GUARANTEED
டயா பூஸ்டர் ஒரு சர்க்கரை நோய்கான உத்தரவாதம்
சர்க்கரை நோய்க்கு
Bye Bye சொல்லுங்கள்,
டயா பூஸ்டருடன்.
72 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள
சர்க்கரையின் அளவை கட்டுக்குள்
கொண்டு வருகிறது..
மேலும் தொடர்புக்கு
78 23 99 7001 | 78 23 99 7004
ஜிங்கா கோல்டு
Jinga Gold
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
GMP
ISO
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY VISHWAM
MedPlus
ஒன்னு போதும்
நின்னு பேசும்!
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
Super stockist Sruti's
ஜிங்கா கோல்டு
ஹெல்ப் லைன்
9962 66 4444
மாவட்ட வாரியான உதவிக்கு
9003640742
For Personal Delivery
9962 8080 90


Advt

## ஆக்ஷன் ரோல்!

மலையாள நடிகையான சம்யுக்தா, தென்னிந்திய அளவில் பிரபலமாக இருக்கும் நிலையில் தெலுங்கில் மட்டும் அதிகமாகக் கவனம் செலுத்தி வருகிறார். அதன் பலனாக 'தி பிளாக் கோல்ட்' என்ற படத்தில் லீட் ரோலில் நடிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளார். இதில் கூடுதல் போனஸாக ஆக்ஷன் அவதாரமும் எடுத்துள்ளார். அதற்காக கடுமையாக உடற்பயிற்சியும் மேற்கொண்டுள்ளார். முதன்முறையாக ஆக்ஷன் + லீட் ரோலில் நடிப்பதால் சவால் நிறைந்ததாக இருப்பதாக சொல்கிறார். மேலும் கடும் மெனக் கெடல்களை கொட்டி வருவதாகவும் இந்த உழைப்புக்கு நிச்சயம் பலன் கிடைக்கும் எனவும் நம்புகிறார். அதோடு இப்படம் தனக்கு மனதுக்கு நெருக்கமான படம் என்றும், நிச்சயம் ரசிகர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை உருவாக்கும் எனவும் கூறுகிறார். இப்படம் பான் இந்தியா படமாக தெலுங்கைத் தாண்டி தமிழ், இந்தி உட்பட மொத்தம் ஐந்து மொழிகளில் வெளியாகிறது. இப்படத்தைத் தவிர்த்து தமிழில் ராகவா லாரன்ஸ் நடிக்கும் 'பென்ஸ்' மற்றும் விஜய்சேதுபதி நடிக்கும் இன்னும் பெயரிடப்படாத படம் என இரண்டு படங்களை சம்யுக்தா வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



சம்யுக்தா

## நல்ல பாதை!

தனுஷ் இயக்கிய 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' படம் மூலம் நாயகனாக அறிமுகமான அவரது சகோதரி மகனான பவிஷ் நாரா யண், அடுத்து எந்த படத்திலும் கமிட்டாகாமல் இருந்தார். இதனால் தனுஷே அவருக்கான கதையையும் கடந்த சில மாதங்களாக கேட்டுவந்தார். இதில் புதுமுகம் மற்றும் முன்னணி நடிகர்களும் இருந்தார்கள். ஆனால் சூழல் நீடித்த நிலையில்... இப்போது பட்டுள்ளது. மகேஷ் என்ற புதுமு நாயகியும் புதுமுகம் என்கிறார்கள் துறையைச் சேர்ந்தவர் எனச் சொ இப்படமும் நிலவுக்கு என் மேல் என் படம் போல் காமெடி கலந்த காத உருவாகிறது. இந்த படத்தில் தனுஷ் சாயல் இல்லாததுபோல் பவிஷ் விருக்கிறார். இப்படம் தனக்கு நல்ல அமைத்து கொடுக்கும் என ம நம்பியிருக்கிறார்.

## நிறைவேறிய ஆசை!

முன்னணி இசை யமைப்பாளரான தேவிஸ்ரீ பிரசாத், நடிப்பதிலும் ஆர் வம் இருப்பதாக அவ்வப் போது தனது ஆசையை தெரிவித்திருந்தார். இத னால் சில பாடல்களில் சிறப்பு தோற்றத்தில் நடனமும் ஆடியிருந்தார். இந்த நிலையில் அவரது ஆசை நிறைவேறியுள் ளது. தெலுங்கில் 'எல்லம்மா' என்ற தலைப்பில் உருவாகும்



எதுவுமே இறுதி செய்யப்படாத
இயக்குநர் ஃபைனல் செய்யப்
க இயக்குநர் இயக்குகிறார்.
. தெலுங்கு திரைத்
ல்லப்படுகிறது.
னடி கோபம்
தல் படமாக
ஷின் நடிப்பு
ஷ் நடிக்க
பாதையை
லைபோல்

படத்தில் அவர் ஹீரோவாக களமிறங்குகிறார். இப்படத்தை பாலகம் (தெலுங்கு) என்ற வெற்றிப் படத்தை கொடுத்த இயக்குநர் வேணு எல்டண்டி இயக்குகிறார். இப்படத்திற்காகத் தேவிஸ்ரீ பிரசாத் தனது உடல் கட்டமைப்பை மாற்றவுள்ளார். இவருக்கு முன் ஹீரோ கதாபாத்திரத்திற்கு நிதின், நானி, சர்வானந்த், பெல்லம் கொண்டா ஸ்ரீனிவாஸ் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது. இந்த சூழலில் தற்போது தேவிஸ்ரீ பிரசாத்துக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷை நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அவரும் க்ரீன் சிக்னல் கொடுத்துவிட்டதாக சொல்கிறார்கள்.



கீர்த்தி சுரேஷ்

## முதல் முறை!

சூர்யா அடுத்ததாக மலையாள இயக்குநர் ஜீத்து மாதவன் இயக்கத்தில் நடிக்க கமிட்டாகியுள்ளார். அடுத்த மாதத்திலிருந்து படப்பிடிப்பு தொடங்குகிறது. அதனால் நடிகர், நடிகைகள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது. நாயகி கதாபாத்திரத்தில் நஸ்ரியாவை அணுகியது படக்குழு, ஆனால் இன்னும் சுமுக முடிவு எட்டப்படவில்லை. இதைத் தொடர்ந்து நஸ்ரியாவின் கணவரும் பிரபல நடிகருமான பகத்பாசிலை வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. இதனால் முதன்முறையாக சூர்யா -பகத்பாசில் கூட்டணி அமையவுள்ளதாகத் தெரியும் சூழலில் இப்போதிலிருந்தே படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. படத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு காவல்துறை அதிகாரியாக சூர்யா நடிக்கவுள்ளார் என்பது கூடுதல் தகவல்.

**-கவிதாசன் ஜெ.**




# சிறார்கள் கொடூர குற்றம் செய்வது எந்த மனநிலையில்?



**தமிழகச் சிறைகளில் ரூ.500 கோடி ஊழல்!**

IPC பிரிவு 82 & BNS பிரிவு 20-ன்படி 7 வயதுக்குக் கீழுள்ள ஒரு குழந்தை செய்யும் எந்தவொரு செயலும் குற்றமாகாது. மேலும் IPC பிரிவு 83 மற்றும் BNS பிரிவு 21-ன்படி 7-12 வயதுள்ள குழந்தை தனது செயல்களின் விளைவுகளைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு பக்குவம்/முதிர்ச்சி அடையவில்லை என நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், அக்குழந்தை செய்த எந்தச் செயலும் குற்றமாகக் கருதப்படாது.

13 வயது முதல் 18 வயதுக்குள் உள்ள தவறு செய்த குழந்தைகளை, இளைஞர் நீதிக்குழுமம் (Juvenile Justice Board) மூலம் விசாரணை செய்து, குற்றம் உறுதியானால் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக, அவர்களைச் சீர்திருத்துவதற்காகவே சீர்திருத்தப்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் - உலகின் முதல் சிறார் சீர்திருத்தப்பள்ளியாக, The New York House of Refuge, 1825 கருதப்படுகிறது. உலகின் முதல் சிறார் நீதி அமைப்பானது, அமெரிக்காவின் Cook County, Illinois நகரத்தில் 1899-ல் நிறுவப்பட்டது. இந்த அமைப்பு இளம் குற்றவாளிகளை பெரிய குற்றவாளிகளிடமிருந்து பிரித்துக் கையாளவும், தண்டனை வழங்குவதைவிட சீர்திருத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது. இதற்கு முன்பு, சிறார்களும் பெரியவர்கள் போலவே விசாரித்து தண்டிக்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் தொழில் பயிற்சியாளர் சட்டம், 1850: சிறிய குற்றங்களைச்

**வாழ்க்கையில் எதிர்பார்த்திருந்தால் மட்டும் வெற்றி கிடைப்பதில்லை -எதிர்நீச்சல் போட்டால் மட்டுமே வெற்றி கிடைக்கும்!**

**JAIL FOLLOW UP 35**

செய்த 15 வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளைச் சிறைக்கு அனுப்புவதற்குப் பதிலாக, தொழிற்சாலையிலோ/நிறுவனத்திலோ தொழில்பயிற்சி பெறும் நபராக நடத்த வழிவகை செய்தது.

**சீர்திருத்தப் பள்ளிகள் சட்டம்:** இச்சட்டம் முதன்முதலில் 1876-ல் கொண்டு வரப்பட்டு, இதிலுள்ள குறைகள் சரி செய்யப்பட்டு, 03.11.1897-ல் மீண்டும் கொண்டுவரப்பட்டது. 15 வயதுக்குக் கீழுள்ள, முதல்முறை தவறு செய்த குழந்தைகளை இந்தப் பள்ளிகளில் அனுமதித்து, கல்வி, தொழில் பயிற்சி மற்றும் தார்மீக வழிகாட்டுதல்கள் மூலம் மறுவாழ்வு அளிப்பதே இதன் நோக்கமாகும்.

இந்திய சிறைச்சாலை கமிட்டி (1919-1920) பரிந்துரையின்படி, மெட்ராஸ் குழந்தைகள் சட்டம், 1920 இயற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1922-ல் வங்காளத்திலும், 1924-ல் பம்பாயிலும் குழந்தைகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் சிறப்பு சிறார் நீதிமன்றங்களையும், சீர்திருத்தப் பள்ளிகளையும் நிறுவியது. இந்தியாவின் முதல் சிறார் நீதிமன்றம் மும்பையில் நிறுவப்பட்டது.

**உலகளாவிய சட்டங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்:** 20.11.1959-ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை வெளியிட்ட குழந்தைகளின் உரிமைகளுக்கான பிரகடனம் மற்றும் லண்டனில் நடைபெற்ற The Second United Nations Congress On The Prevention Of Crime And Treatment Of Offenders (Focus On Juvenile Delinquency), ஆகஸ்ட் 1960-ல் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், இந்திய யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில், இந்திய அரசு, குழந்தைகள் சட்டத்தை டிசம்பர் 1960-ல் இயற்றியது. இச்சட்டம் எந்தச் சூழ்நிலையிலும் குழந்தைகளைச் சிறையில் அடைப்பதைத் தடைசெய்தது. மேலும் சில மாநிலங்கள், குற்றம் செய்த இளம் சிறார்களைக் கையாள்வதற்கென்றே சொந்தமாகச் சட்டத்தை இயற்றியிருந்தன.

Sheela Barse Vs. Union of India என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட/கைவிடப்பட்ட/ஆதரவற்ற குழந்தைகளின் சமூக, பொருளாதார மற்றும் உளவியல் மறுவாழ்வை உறுதி செய்வதற்கு, இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியான குழந்தைகள் சட்டம் மற்றும் விதிகளை இயற்றவும், அச்சட்டம் திறம்பட செயல் படுத்தப்படுவதை உறுதி செய்யவும், மத்திய அரசுக்கு 05.08.1986-ல் பரிந்துரைத்தது.

உச்ச நீதிமன்ற பரிந்துரையின்படியும், The United Nations Minimum Rules for the Administration of Juvenile Justice, 1985 (Beijing Rules)-ன்படியும், குழந்தைகள் சட்டம், 1920 மற்றும் 1960 நீக்கப்பட்டு, இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியான சிறார் நீதிச் சட்டம், (Juvenile Justice Act) 1986 அமலுக்கு வந்தது.

அதன்பின், United Nations Convention on the Rights of the Child (1989), United Nations Guidelines for the Prevention of Juvenile Delinquency (The Riyadh Guidelines -14.12.1990) மற்றும் the Hague Convention on Protection of Children and Co-operation in Respect of Inter-country Adoption (1993) ஆகியவற்றின் அடிப்படையில் Juvenile Justice Act, 1986 நீக்கப்பட்டு, The Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000 சட்டம் அமல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தில் குழந்தை என்பதற்கான விளக்கத்தை, 16 வயதிலிருந்து 18 வயதாக உயர்த்தியது குறிப்பிடத்தக்கது.

Arnit Das Vs. State of Bihar (09.05.2000) மற்றும் Pratap Singh Vs State of Jharkhand (02.02.2005) ஆகிய வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின்படி, இச் சட்டத்தில் 2006-ல் செய்த சட்டத் திருத் தத்தில், குற்றம் நடந்த தேதியிலிருந்து சிறார் என்று கருதப்படும் என்பதும் எந்த நிலை யிலும் சிறார்கள்



ஷீலா பார்ஸ்

**வாழ்க்கை நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகிறது -அதில் ஒன்றுதான் யார், யாரிடம் எப்படிப் பழகணும்.. எந்தளவுக்குப் பழகணும் என்பது!**


சிறைகளில் அல்லது காவல்நிலைய லாக்கப்பில் வைக்கப்படக்கூடாது என்பதுவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

2005-ல் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டத்தின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகள், தேசிய மற்றும் மாநில அளவில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்கியது.

Bachpan Bachao Andolan Vs Union of India & Others (W.P.(C).No.51/2006) என்ற வழக்கில், இந்தியாவில் சிறார் நீதிச் சட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தவேண்டியும், குழந்தைகளின் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியும் 18.04.2011-ல் வழங்கிய தீர்ப்பில், உச்ச நீதிமன்றம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.



நீதிபதி ஜே.எஸ்.வர்மா



நீதிபதி மதன் லோகூர்

Madan B Lokur, உச்ச நீதிமன்ற நீதிபதி: ஆகஸ்ட், 2013-ல் உச்ச நீதிமன்றம், சிறார் நீதிச் சட்டம், 2000 மற்றும் விதிகள், 2007-ன் கீழ் செயல்படும் இல்லங்களின் மேம்பட்ட செயல்பாடுகளுக்குப் பரிந்துரைக்க, நீதிபதி மதன் பீமாராவ் லோகூரை ஒரு நபர் கமிட்டியாக நியமித்தது. அவர், நாடு முழுவதும் 40 சதவீதம் சிறார் இல்லங்கள், சிறைகளை விட மோசமான நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, பல பரிந்துரைகளை வழங்கினார். இவர் கடந்த 30-12-2018-ல் ஓய்வு பெற்றார். அதன்பின் Chair person of the UN Internal Justice Council-ஆக நியமிக்கப்பட்டார். இவரது பதவிக் காலம் 12-11-2028-ல் முடிவடைகிறது.

நீதிபதி J.S. வர்மா கமிட்டி: 16.12.2012-ல் நடந்த டெல்லி நிர்பயா வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளிக்கு, 18 வயது ஆவதற்கு சில மாதங்களே இருந்ததால், அவரை குழந்தையாகப் பாவித்து தண்டனை வழங்கப்பட்டது, இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

பாலியல் வன்கொடுமைச் சட்டங்களில் உரிய திருத்தங்களைக் கொண்டுவர நீதிபதி J.S. வர்மா தலைமையில் மூன்று நபர் கமிட்டியை 23.12.2012-ல் மத்திய அரசு அமைத்தது. இக்குழு 23.01.2013-ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான, சிறார் நீதிச் சட்டத்தில் உரிய மாற்றம் செய்யப்பட்டு, 16-18 வயதிற்குட்பட்டவர்கள் புரிந்துள்ள குற்றங்கள் கொடூர குற்றமாக (heinous offence) இருப்பின், அவர்கள் சிறார் என்ற மனநிலையில் செய்தனரா? அல்லது இளைஞர் என்ற மனநிலையில் செய்தனரா? என்பதைக் கண்டறிந்து, வயது வந்த நபருக்கான மனநிலையில் செய்தது உறுதியானால், வயது வந்த நபராகவே பாவித்து, வழக்கு விசாரணை செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரைத்தது.

சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015: மேற்கூறிய உச்ச நீதிமன்ற தீர்ப்புகளாலும், வரலாற்று படிப்பினைகளாலும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இதன்மூலம், 16-18 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை, கொடூரமான குற்றத்தைச் செய்வதற்கான மன மற்றும் உடல் திறன், குற்றத்தின் விளைவுகளைப் புரிந்துகொள்ளும் திறன் மற்றும் அவர் குற்றம் செய்ததாகக் கூறப்படும் சூழ்நிலைகள் குறித்து இச்சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 18-ன் கீழ் முதற்கட்ட விசாரணை நடத்தி, பிரிவு 15-ன்படி வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடத்தப்படவேண்டுமென உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்.

சிறார் நீதி திருத்தச் சட்டம், 2021-ன்படி, குழந்தைகளைத் தத்தெடுப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம், சிவில் நீதிமன்றத்திடமிருந்து மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டுள்ளது.

**(ஊழல் தொடர்ந்து கசியும் )**

**-ராம்கி**

சேலையுடன் டோக்கன் வழங்கிய சசி



# அ.தி.மு.க தொடக்க நாள் விழா! "டோக்கன் கொடுத்த சசிகலா!"




அந்த டோக்கன்...

**நா**ன்தான் அ.தி.மு.க.வின் நிரந்தரப் பொதுச் செயலாளர் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சசிகலா கட்சியின் 54-வது ஆண்டு தொடக்க விழாவை, அக்டோபர் 17-ஆம் தேதி பெரிய நகரங்களிலோ, அரங்கங்களிலோ பிரம்மாண்டமாக நடத்தவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் முக்குலத்தோர்கள் அதிகமுள்ள பல கிராமங்களை உள்ளடக்கிய வாணக்கண்காடு கிராமத்திலுள்ள மாரியம்மன் கோயில் திடலில் 600 பேரோடு நடத்தி முடித்துள்ளார். 17-ஆம் தேதி மாலை 4 மணிக்கு நடக்கும் விழாவில் சசிகலா பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்டங்கள் வழங்குவதாக அறிவிப்புகள் வெளியான நிலையில், திறந்தவெளி அரங்கில் மாலை 6 மணி வரை காலி நாற்காலிகளே கிடந்தன. அதன்பிறகே கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் அழைத்துவரப்பட்டனர்.

7.20 மணிக்கு மேடைக்கு வந்த சசிகலா, "1977-ல் எம்.ஜி.ஆர். ஏழைகளுக்காக, கிராம மக்களுக்காக தொடங்கிய கட்சிதான் அ.தி.மு.க. அவர் ஆட்சிக்கு வந்த பிறகே கல்வி நிறுவனங்கள் அதிகரித்தன. மக்கள் நலத்திட்டங்களும் வழங்கப்பட்டன. ஜெ. நிறைய செய்தார். அதன்பிறகு வந்தவர்கள் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. ரூ.12 லட்சம் கோடி கடன்தான் வைத்திருக்கிறார்கள். அடுத்து நம்ம ஆட்சிதான் வரும். விவசாயிகளுக்காக நல்ல திட்டங்களை வைத்திருக்கிறேன். அதற்கு நாம ஒற்றுமையா இருக்கணும். அதற்காகத்தான் 54-ஆம் ஆண்டு தொடக்க விழாவை இந்த குக்கிராமத்தில் நடத்துகிறேன்" என்றார்.

கூட்டம் முடிந்ததும், பயனாளிகளுக்கு ஒரு சேலையும், தையல் இயந்திரம், மருந்து தெளிக்கும் ஸ்பிரேயர், கிரைண்டர் ஆகியவற்றுக்கான டோக்கன்களை வழங்கினார் சசிகலா. 15 பேருக்கு மட்டும் சசிகலா வழங்க, மற்றவர்களுக்கு பின்னர் வழங்கப்படும் என்று கூறியிருந்த நிலையில்... பெயர் படித்தவர் வரிசையாக பெயர்களை வாசித்துக்கொண்டே போக, ஒவ்வொரு டோக்கனுக்கான பயனாளியை மேடையேற்ற 5 நிமிடங்கள் வரை தாமதமானதால் டோக்கன்களை நீண்டநேரம் கையிலேயே வைத்துக்கொண்டு டென்ஷனைக் காட்டாமல் நின்று வழங்கினார்.

சசிகலா டோக்கன் வழங்கி முடித்து கீழே இறங்கியதும், அங்குநின்ற பெண்கள் கூட்டம் மேடையிலிருந்த சேலைகளைப் பெற முண்டியடித்து ஏறி மேடையைத் தள்ளாட வைத்துவிட்டனர். டோக்கன் வாங்க வரும் பெண்களிடம், அதற்குமுன்பாக நின்ற ஒருவர் 'சின்னம்மா கால்ல விழுந்து வணங்கிட்டு டோக்கன் வாங்குங்க' என்று சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தார்.

"டோக்கன் கொடுத்தாங்களே பொருள் எப்ப கொடுப்பாங்க?'' என்ற கேள்விக்கு, ''டோக்கன் கொடுத்தவர்கள் முகவரியை வாங்கியிருக்காங்க. பார்சலில் பொருட்கள் வீட்டுக்கு வரும்" என்றனர்.

'வேட்பாளர்களையே நிர்ணயித்து, அமைச்சர்களை முடிவுசெய்த சசிகலாவை டோக்கன் கொடுக்க வச்சுட்டாங்க' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தனர் பலர்.


**-இரா.பகத்சிங்**



தீக்குளிக்க முயற்சி

# விளைபூமி... சோலார் மி...

## -கொந்தளிக்கும்...



பசுமை நிறைந்த கல்லத்திக்குளம்

வழக்கமான திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் கூட்ட தினத்தின் போது தென்காசி மாவட்ட கலெக்டரிடம் மக்கள் தங்களின் மனுக்களை கொடுத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்சியர் அலுவலகத்தின் முன்னே வழக்கத்திற்கு மாறாக ஒரே கிராமத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். இவர்களில் குறிப்பிட்ட சிலர் ஆட்சியரைச் சந்தித்து தங்களது பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்று சோலார் மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்காக விளைநிலங்களிலுள்ள லட்சத்திற்கும் மேற்பட்ட மரங்களை அழித்து விவசாயத்தை நாசப்படுத்தி வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்த வேண்டுமென மனுவும் கொடுத்துக்கொண்டிருந்தனர்

அலுவலகம் முன்னே திரண்டிருந்த விவசாயிகள் தரையிலமர்ந்து தர்ணாவில் ஈடுபட்ட நிலையில், திடீரென்று சிலர் தங்கள் கையிலிருந்த பாட்டில்களில் இருந்த மண்ணெண்ணெயை தங்கள் தலையில் ஊற்றிக்கொண்டு அருகிலிருந்த சிலர்மீதும் ஊற்றினர். இதில் 7-க்கும் மேற்பட்டோர்களின் மீது மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டது. இதைக்கண்டு பரபரப்பான போலீசார் சுதாரித்து அவர்களின் உடலில் தண்ணீரை ஊற்றினர். ஒருசிலர் தீவைக்க முயன்றபோது கடும் முயற்சிக்குப் பின் அவர்களை போலீசார் தடுத்தனர்.

‘நாங்கள் சாவதற்கு தயாராகத்தான் வந்திருக்கிறோம். எங்களின் பூர்வீக கல்லத்திகுளம் கிராம விவசாய பூமி நாசமாக்கப்பட்டு சுடுகாடாக்கப்பட்டுவிட்டது. வாழ்வதற்குத் தகுதியற்ற எங்கள் கிராமத்தில் நாங்கள் இருந்தென்ன, போயென்ன? அதற்காகத்தான் இந்த முடிவுக்கு வந்தோம்’ என்று ஓங்கி குரலெழுப்பியிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 50 பெண்கள் உள்ளிட்ட 108 விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆட்சியர் அலுவலகத்தின் முன்னே 7-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்யமுயன்றது மாவட்டத்தில் பெரும் அதிர்வலைகளைக் கிளப்பியது.

ஆலங்குளம் அருகேயுள்ள மாறாந்தை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது கல்லத்திகுளம் கிராமம். சுமார் 300 வீடுகளைக் கொண்ட அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்டோர். பரம்பரையாக குடியிருந்துவருகின்றனர். அவர்களின் அடிப்படை தொழிலே விவசாயம் சார்ந்ததுதான்.

அங்குள்ள வேளாண் மக்களுடன் நாம் பேசியதில், காலங்காலமாக பட்டம் தவறாத




போராட்டத்தில்...

# ...ய அழித்து ...ன் திட்டமா?

## கல்லத்திகுளம்!



சோலார் மின் திட்டத்திற்காக அழிக்கப்பட்ட விவசாய பூமி

மழைச்சூழலையும் பசுமையான ஏரியாவையும் கொண்டது கல்லத்திகுளம் கிராமம். அங்குள்ள தங்கள் நிலங்களில் பருத்தி, நெல் பயிரிட்டு வந்திருக்கிறார்கள். அதையடுத்துள்ள வனத்துறையின் காப்புக் காட்டையொட்டி 200-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் மா, பலா, சப்போட்டா, எலுமிச்சை உள்ளிட்ட பணப்பயிர்களை பயிரிட்டு வந்திருக்கின்றனர்.

40 வருடங்களுக்கு முன்பு இந்த விவசாயிகள் ஆடுமாடுகள் கால்நடைகளை வளர்ப்பதற்காக அருகிலுள்ள சிவலார்குளம் கூட்டுறவு வங்கியில் தங்களின் நிலங்களை அடமானம் வைத்து கடன் வாங்கியிருக்கிறார்கள். காலப்போக்கில் நோயாலும், தொடர்மழை காரணமாகவும் ஆடு, மாடு, கால்நடைகள் மடிந்திருக்கின்றன. இதனால் அவர்களால் வங்கியில் வாங்கிய தங்களின் கடன்களை அடைக்கமுடியாமல் போயிருக்கிறது. இதுகுறித்த விவரங்களோ நோட்டீஸோ விவசாயிகளுக்கு அனுப்பாமலிருந்திருக்கிறது வங்கி. கடன் சுமையோடு வட்டியும் சேர ஒரு காலகட்டத்திற்குப் பின்பு ஜப்தி நோட்டீஸ் கொடுத்த வங்கி தங்களிடம் அடமானமாக வைக்கப்பட்ட அத்தனை ஏக்கர் நிலத்தையும் ஜப்திசெய்து ஏலம்விட்டபோது, அந்த 200 ஏக்கர் நிலங்களை சென்னையை சேர்ந்த ரமணி வாங்கியிருக்கிறார்.



இந்தச் சூழலில் நில புரோக்கர்களின் மூலம் அருகிலிருக்கிற திருச்சி பார்ட்டி ஒருவருக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தையும் சென்னை பார்ட்டி வாங்கியதோடு மொத்தமாக விவசாயம் செய்திருக்கிறார். இப்படி வாங்கப்பட்ட 350 ஏக்கர் வனத்துறையின் ரிசர்வ் ஃபாரஸ்ட்டை யொட்டி அமைந்திருக்கிறது. இதனிடையே கல்லத்திகுளத்தை தாண்டிய சில தரிசு காட்டுப் பகுதிகளில் சோலார் மின்பேனல் அமைக்கும் திட்டம் ஏற்பாடாகியிருக்கிறது. இந்தச் சூழலில் சென்னை பார்ட்டி தன்னிடமுள்ள 350 ஏக்கர் நிலம் நிலத்தையும் நில புரோக்கர்கள் மூலம் வாங்கிய விலையிலிருந்து 5 மடங்கு கூடுதல் விலைக்கு கோவையைச் சேர்ந்த வி.சி. கிரீன் எனர்ஜி பி.லிமிடட் கம்பெனிக்கு கடந்த ஜூன் மாதம் விற்றிருக்கிறார்.

வாங்கிய அந்த கம்பெனி மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி சமன்செய்து சோலார் மின்பேனல்கள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. இதையறிந்த கல்லத்திகுளம் விவசாயிகள், அவர்கள் மரத்தை வெட்டும்போதே ஆலங்குளம் காவல்நிலையத்திற்கும், தென்காசி மாவட்ட ஆட்சியருக்கும் புகார் மனு கொடுத்ததோடு. அங்கே சோலார் மின்பேனல் அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளின் இந்த மனுவின்மீது காவல்துறை, ஆட்சியர் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

www.nakkheeran.in

மன உறுதியும், உடல் உறுதியும் ஒன்றுசேர்ந்தால், தடைகள் உடைபடும் உறுதியாக!

கண்ணன்



பெருமாள்



சோலார் மின்பேனல் அமைப்பதற்கு கிராம மக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியதால் அவர்கள் அடியாட்கள் மூலம் மிரட்டப்பட்டார்களாம். விளை நிலங்களை அழித்து, மரங்களை வெட்டி அப்புறப்படுத்தியதில் தங்களின் விவசாய வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோனது. அதனால் தனியார் நிறுவனத்தின் செயல்பாட்டை அரசு மற்றும் மாவட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்தவேண்டுமென்று பல்வேறு அரசுத் துறை அதிகாரிகளிடம் கிராம மக்கள் கோரிக்கை மனு கொடுத்ததில் இதுவரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் இல்லை.

சோலார் மின் பேனலுக்காக அழிக்கப்பட்ட அந்த விவசாய நிலங்கள் வனத்துறையின் ரிசர்வ் ஃபாரஸ்டை யொட்டி வருவதால், அந்த ஏரியா சிறப்பு பகுதியான ஊட்டி உள்ளிட்ட மலைப்பகுதிக்கு இணையான ஹில் ஏரியா கன்சர்வேட்டிவ் சட்டத்தில் வருவதால் அதன்படி மரங்கள் வெட்டத் தடையிருக்கிறது. மேலும் சிறப்பு ஏரியாவிற்குரிய ப்ரிசர்வேஷன் ஆக்ட் பிரிவு 3-ன் படி மரங்களை வெட்டக் கூடாது. ஆனால் அரசு அதிகாரிகள், வனத்துறையினர் இந்த விதியைப் பின்பற்றவில்லை. மின்திட்டத்திற்காக 350 ஏக்கர் விவசாய பூமியே அழிக்கப்பட்டுவிட்டதால், முன்பு காப்புக்காடுகளில் தங்கியிருந்த வனமிருகங்கள் ஊருக்குள் புகுந்துவிடுவது மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

கல்லத்திகுளத்திற்குச் சற்று தொலைவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதால் அங்கே சோலார் மின்திட்டம் அமைக்கலாமே, நாங்கள் சோலார் மின்பேனல் அமைக்கவேண்டாமென்று எதிர்க்கவில்லை. ஆனால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்து மின்திட்டம் அமைக்கவேண்டுமா என்பதுதான் எங்களின் கேள்வி. வேறு வழியில்லாமல் நாங்கள் இந்த விவகாரத்தை உயர்நீதிமன்றம்வரை கொண்டுபோனதில், அதனை விசாரித்த உயர்நீதிமன்றமும் கல்லத்திகுளம் திட்டத்திற்கு அக்டோபர் 24 வரை தடையுத்தரவு வழங்கியிருக்கிறது என்கிறார்கள்.

இதுகுறித்து விவசாயியான பெருமாள், "மரங்கள் வளர்த்து மழை பெற பசுமைச் சூழலை உருவாக்குங்கள் என்று அரசு சொல்லுகிறது. ஆனால் இங்கோ பசுமையை அழித்து கந்தக பூமியாக்குகிறார்கள். சோலார் மின்பேனல்களில் படியும் அசுத்தங்கள், மணல் திட்டுக்களை 10 மாதங்களுக்கு ஒருமுறை சுத்த நீர் கொண்டு முழுமையாக சுத்தப்படுத்தினால்தான் அவைகளின் மூலம் மீண்டும் மின்சாரம் தயார்செய்ய முடியும். அதற்காக அத்தனை சோலார் மின்பேனல்களுக்கும் 15 லட்சம் லிட்டர் சுத்தமான தண்ணீர் தேவை. அந்த ஏரியாவின் நிலத்தடி நீரை உறிஞ்சித்தான் ஆகவேண்டும். இதனால் மிச்சமிருக்கிற விவசாயத்திற்கு தேவையான நிலத்தடி நீரும் வற்றிப் போய்விடும். நாங்கள் எவ்வளவோ போராடிப் பார்த்துவிட்டோம். பறிபோன எங்களின் விவசாய வாழ்வாதாரத்தை மீட்கமுடியவில்லை. எங்களின் ஆதார், ரேசன் கார்டுகளை அரசிடம் ஒப்படைத்துவிடுகிறோம். எங்களை கருணைக் கொலை செய்துவிடுங்கள் அல்லது நாடு கடத்திவிடுங்கள்" என்றார் வேதனையோடு.

300 மெகாவாட் மின்சாரம் தயாரிப்புக்கு அனுமதி வாங்கியிருக்கிறார்கள் என்று நம்மிடம் தெரிவித்த கிராமத்தின் கண்ணன், "சோலார் மின் தயாரிப்பு அமைக்கப்பட்ட இடத்தையொட்டித்தான் எங்கள் கிராம மக்களின் குடியிருப்பு இருக்கிறது. அப்படி ஒட்டுமொத்தமாக சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் தயாரிக்கும்போது சோலார் பேனல்கள் வெளியேற்றுகிற மொத்த வெப்ப அலையும் எங்களின் குடியிருப்பைத்தான் தாக்கும். அந்த அனலின் வெப்பத்தில் நாங்கள் எப்படி குடியிருக்க முடியும். கல்லத்திகுளம், மக்கள் வாழத்தகுதியற்ற வெப்ப பூமியாகிவிடும். அதனால்தான் நாங்கள் இத்திட்டத்தை தரிசுக் காடுகளில் அமையுங்கள் என்று கோரிக்கை வைக்கிறோம்" என்றார் அழுத்தமான குரலில்.

கல்லத்திகுளம் மக்களின் வாழ்வாதாரமும் எதிர்காலமும் அரசு மேற்கொள்ளும் முடிவில்தான் இருக்கிறது..

**-ப.இராம்குமார்**



# திராவிடக்கவிஞர் முடியரசனாருக்கு மணிமண்டபம்! முதல்வருக்கு கோரிக்கை!



கவிஞர் முடியரசனார்

திராவிட இயக்கக் கவிஞர்களில் முதன்மையானவரான முடியரசனாரின் நினைவைப் போற்றும் வகையில், மணிமண்டபம் கட்ட வேண்டுமென தமிழ்நாடு அரசுக்கு வேண்டுகோள் வைத்துள்ளனர்.

'கவிஞன் யார் என்பதற்கான எடுத்துக்காட்டு திராவிட இயக்கப் பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்' என்று தந்தை பெரியாராலும், 'திராவிட நாட்டின் வானம்பாடி கவிஞர் முடியரசன் ஆவார். புரட்சிக்கவிஞர் அடிச்சுவட்டில் இன்று எத்தனையோ கவிஞர்கள் எழுச்சி முரசு கொட்டி வருகிறார்கள், இலட்சிய கீதம் இசைத்துவருகிறார்கள். அந்த வரிசையில் முதன்மையானவர் முடியரசன்' எனப் பேரறிஞர் அண்ணாவாலும் பாராட்டப்பட்டவர் வீறுகவியரசன் முடியரசனார். பெரியகுளத்தில், 1920ஆம் ஆண்டில் பிறந்த முடியரசனின் இயற்பெயர் துரைராசு. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நெருங்கிய நட்பைப் பெற்றபின்னர், முடியரசன் ஆனார். பெரும்புலவரான தனது தாய்மாமா துரைசாமி மூலமாக இளம்வயதிலேயே மொழிப்பற்றையும், இலக்கிய உணர்வையும் வளர்த்துக்கொண்டார்.





கலைஞர், பெரியாருடன் முடியரசனார்

1940ஆம் ஆண்டு முதல் மரபுக்கவிதைகளை எழுதிவந்தவர், கவியரங்க மேடைகளில் தனது அனல்பறக்கும் கவிதைகளால் சிலிர்க்க வைத்தார். திராவிட இயக்கத்தில் நூற்றுக்கணக்கான கவிஞர்கள் இருந்தபோதிலும், 'என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே' என்று புரட்சிக்கவி பாரதிதாசனால் பாராட்டப்பட்டவர் முடியரசன். அவரது கவியரங்கக் கவிதைகள், 'கவியரங்கில் முடியரசன்' என்ற தலைப்பில் அச்சேறியது. இதுவரை, 18 கவிதை நூல்கள், 3 காப்பியங்கள், 3 கதை நூல்கள், 2 கட்டுரைத் தொகுப்புகள், 2 கடித இலக்கியம், 4 பாட நூல்கள் என முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை படைத்துள்ளார்.

முடியரசனின் கவிதைகள், பேரறிஞர் அண்ணாவை கவர்ந்ததால், திராவிட நாடு இதழ்களின் அட்டைகளில் முடியரசனின் கவிதைகளை அச்சேற்றினார் அண்ணா.

முடியரசனார் குறித்து கலைஞர், 'தன்மானக்குன்றம், தலைதாழாச் சிங்கம், கொள்கைமாறாத் தங்கம், திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர், திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர் முடியரசனார். இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று செங்கோலோச்சுகிறதென்றால், அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்' என்று புகழ்ந்தார்.

பெருமைவாய்ந்த கவிஞர் முடியரசனார் நூற்றாண்டு நிறைவைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், காரைக்குடியில் முடியரசனாருக்கு மணிமண்டபம் அமைக்க வீறுகவியரசன் முடியரசன் அவைக்களம் சார்பாக வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, அரசின் சார்பில் நிலம் ஒதுக்கப்பட்டு, முடியரசனாரின் சிலை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. அதோடு, அவ்விடத்திலேயே அரசுக்கு வருவாய் வரத்தக்க வகையில், ஆயிரம் பேர் அமரத்தக்கவாறு அரங்க வடிவில் மணிமண்டபம் அமைக்க உத்தரவிட வேண்டுமென்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

திராவிட மாடல் அரசு, திராவிடக் கவிஞருக்கு மணிமண்டபம் அமைத்து சிறப்பிக்குமா?

**-தெ.சு.கவுதமன்**

www.nakkheeran.in



# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு! சம்பவ செந்திலை பாதுகாக்கும் பா.ஜ.க!

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றவேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, தற்போது அந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த சில மாதங்களில் அவ்வழக்கில் விசாரணைக்குள்ளானவர்களும், தலைமறைவாக இருக்கும் சம்பவ செந்திலுக்கு நெருக்கமானவர்களும் வரிசையாக பா.ஜ.க.வில் இணைந்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்வதற்கு ரவுடி சம்பவ செந்தில் உள்ளிட்டோரை ஒருங்கிணைத்தவரான மொட்டை கிருஷ்ணன் என்பவரை போலீசார் தீவிரமாக தேடிவருகிறார்கள். இந்நிலையில், மொட்டை கிருஷ்ணனின் செல்போன் நம்பரை வைத்து போலீசார் விசாரணை செய்தபோது, அவருடைய சிம்கார்டு அகில் குமார் என்பவரின் பெயரில் இருந்துள்ளது. அதனால் தமிழக போலீசார் அகில்குமாரை விசாரணை செய்துள்ளனர். அகில்குமாரும், மொட்டை கிருஷ்ணனும் ரவுடி சம்பவ செந்திலுக்கு பினாமியாக செயல்பட்டுவருபவர்கள். சம்பவ செந்திலின் பணத்தை வைத்தே ஐ.பி.எல். சூதாட்டம் உள்ளிட்ட பலவற்றில் ஈடுபட்டுள்ளனர். இவ்வழக்கு எப்படியும் சி.பி.ஐ.க்கு மாற்றப்படும், அப்படி மாற்றப்பட்டால் மேலும் சிக்கலை உண்டாக்குமென்பதை முன்கூட்டியே யோசித்த ரவுடி சம்பவ செந்தில், தனது கூட்டாளிகளின் பாதுகாப்புக்காக, மத்தியில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க.வில் இணைக்கத் திட்டமிட்டார். தனக்கு நெருக்கமான சரத் மூலமாக வட சென்னை மாவட்டத் தலைவரான நாகராஜிடம் தொலைபேசியில் பேசிய சம்பவ செந்தில், 'நம்ப பசங்கதான், அவங்களுக்கு கட்சியில் பொறுப்புக்களை வாங்கிக்கொடுங்க' என்று கேட்டுள்ளார்.

அதற்கு, "பிரதமர் மோடியின் பிறந்தநாள் செப்டம்பர் 17ஆம் தேதி வருகிறது. அந்த விழாவுக்கான பணிகளை செய்யுங்கள். மேலும், மாநிலத்தலைவர் நயினார், இளைஞர் அணி எஸ்.ஜி.சூர்யா, எல்முருகன் ஆகியோரை சரிக்கட்டணும். அப்போது தான் உங்களுக்கு பொறுப்பு கிடைக்கும்" என மாவட்ட தலைவர் நாகராஜ் சொல்லவே, அதன்படி நாகராஜிடம் வைட்டமின் 'ப' கொடுத்துள்ளனர்.

மாவட்ட தலைவர் நாகராஜ் சொன்னபடியே ராயபுரத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் மோடி பிறந்த நாளன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அன்பளிப்பாக வழங்கும் விழாவை அகில்குமார் நடத்தியுள்ளார். அந்த விழாவிற்கு பா.ஜ.க. மாநிலத்தலைவர் நயினாரை வரவழைத்து அவர் மூலமாக அந்த குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கினார். அந்த விழாவுக்கு அடுத்த நாளே அகில்குமாருக்கு மாநில இளைஞர் அணி செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது.



சம்பவ செந்தில்

சம்பவ செந்திலுக்கு துப்பாக்கி, நாட்டு வெடிகுண்டு, கத்தி போன்றவற்றை சரத் என்பவர்தான் சப்ளை செய்வாராம். அதேபோல் முக்கிய நபர்களிடம் பேசுவதற்கு சரத்தின் செல்போனைத்தான் சம்பவ செந்தில் பயன்படுத்துவாராம். சரத் மீது, என்1 ராயபுரம் காவல்நிலையத்தில் ஆள்கடத்தல் வழக்கு உள்ளது. இப்படிப்பட்ட சரத்துக்கு பா.ஜ.க.வில் மாவட்ட இளைஞரணி தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டது.

மோடி பிறந்தநாள் விழாவில் நயினாருடன் அகில்குமார்





நடுவில் சூர்யா - அருகில் நிரஞ்சன் சரத் (கருப்புச்சட்டை)



சூர்யாவுடன் அகில்குமார்

அதேபோல், ஏற்கெனவே பா.ஜ.க.விலிருந்து நீக்கப்பட்டிருந்த நிரஞ்சனுக்கு, மீண்டும் வட சென்னை கிழக்கு மாவட்ட துணை பொதுச்செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. தலைமறைவான செந்திலுக்கு பணம் உள்ளிட்டவற்றை கொடுத்து பேணிக்காத்துவருபவர் நிரஞ்சன். இவர் ஒரு பள்ளியையும் தண்டையார்பேட்டையில் நடத்திவருகிறார். ஒரே சமூகம் என்பதாலேயே 'நம்ம தம்பி' எனக்கூறி சம்பவ செந்தில் இணைத்துக் கொண்டார். தற்போது அவருக்கும் கட்சியில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்படி முதற்கட்டமாக தன்னைச் சுற்றியுள்ள முக்கியமான நபர்களுக்கு பா.ஜ.க.வில் பொறுப்புகளை வாங்கிக் கொடுத்து அவர்களிடம், 'எனக்கு எந்தவிதமான பிரச்சனையும் வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். எப்படியாவது எல்.முருகன் மூலமாகப் பேசி, இந்த சி.பி.ஐ. விசாரணையில் தொந்தரவு செய்யாமல் பார்த்துக்கொண்டால் போதும். வருகின்ற தேர்தலுக்கான நிதியாக எவ்வளவு தொகை கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்'. என சரத் மூலமாக பா.ஜ.க. வடசென்னை மாவட்டத் தலைவர் நாகராஜிடம் பேசியுள்ளாராம். பா.ஜ.க. தரப்பிலும், "கேட்கின்ற தொகையை மட்டும் கொடுத்தால் போதும், நிச்சயமாக இந்த விசாரணையில் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. எப்போதும் போலவே தலைமறைவாகத் தேடப்படும் குற்றவாளியாகவே இருப்பீங்க" என்று அவரிடம் பேசி முடித்துள்ளார்களாம்.

ஏற்கெனவே, சம்பவ செந்தில் எப்போது சிக்கினாலும் என்கவுண்டரில் போட்டுத்தள்ள தமிழக போலீஸ் தயாராக இருந்துவந்த நிலையில், தற்போது எதிர்பார்த்தது போல வழக்கு சி.பி.ஐ. வசம் கைமாறியதும், பா.ஜ.க.வில் பாதுகாப்பு தேடும் புதுரூட்டை கையிலெடுத்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் அரசியலில் இறங்கியுள்ளார் சம்பவ செந்தில். கொலைக்குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ள தேடப்படும் குற்றவாளிகளுக்கும், ரவுடிகளுக்கும் அடைக்கலம் தரும் கட்சியாக உருவெடுத்துள்ள பா.ஜ.க., எப்படி மற்ற அரசியல் கட்சிகளை நோக்கி குற்றம் சுமத்துமென்று கேள்வி எழுப்புகிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்..

–சே

# அ.தி.மு.க. ஒப்பந்ததாரருக்கே அதிகாரம்!

## –புதுக்கோட்டை தி.மு.க. குமுறல்!



முருகேசன்




பரபரப்பான போஸ்டர்

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், சுமார் 10 வருடங்களாக ஒப்பந்தப் பணிகள் பெரிதாகக் கிடைக்காமல் சிரமப்பட்டுக்கொண்டிருந்த தி.மு.க. ஒப்பந்தக்காரர்கள், தி.மு.க. ஆட்சி வந்ததும், இனி நமக்கு நிறைய ஒப்பந்தங்கள் கிடைக்குமென்று ஆர்வத்தில் இருந்தனர். ஆனால் ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்கிறார்கள் புதுக்கோட்டை மாவட்ட பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்கள். அதிகாரிகள் ஆசியில் வழக்கம்போல அத்தனை பணிகளையும் பழைய அ.தி.மு.க. ஒப்பந்தக்காரர்களே கைப்பற்றிக் கொள்வதால், எங்களுக்கு ஒரு வேலை கொடுங்கள் என்று அவர்களிடம் கேட்டுப்பெறவேண்டிய அவல நிலைதான் உள்ளது என்று முதலமைச்சர் வரை தி.மு.க முதல்நிலை ஒப்பந்தக்காரர்கள் மனுக்களை அனுப்பியுள்ளனர்.

அதேபோல தற்போது, சுமார் ரூ.200 கோடிக்கான ஒப்பந்தப்பணிகள் வந்தபோது, தி.மு.க ஒப்பந்தக்காரர்களுக்கு சரியான நேரத்தில் சரியான சான்றுகள் வழங்காமல் அதிகாரிகள் இழுத்தடித்து, கடைசி நேரத்தில் முழு கமிசனை அ.தி.மு.க. ஒப்பந்தக்காரர் சோத்துப்பாளை முருகேசனிடம் கொடுத்துவிட்டு, சான்றுகளை அவரிடம் வாங்கி டெண்டரில் கலந்துகொள்ளுங்கள் என்று சொன்னதால் கடுப்பான தி.மு.க ஒப்பந்தக்காரர்கள் பலர், நீதிமன்றத்திற்கும், லஞ்ச ஒழிப்புத்துறைக்கும், முதலமைச்சருக்கும் மனு போட்டுள்ளனர். கடைசி நேரத்தில் முழுக்கமிசன் கொடுத்த ஒப்பந்தக்காரர்களுக்கு அ.தி.மு.க ஒப்பந்தக்காரர் முருகேசன் தனது வீட்டில் வைத்து அதிகாரிகள் கையெழுத்துப் போட்ட சான்றுகளை வழங்கியுள்ளார்.

இதுசம்பந்தமாக, பாதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், ‘நெடுஞ்சாலைப் பணியில் ரூ.200 கோடியில் 20 சதவீதம் கமிசன், ரூ.40 கோடி கமிசன்’ என்று போஸ்டர் அடித்து நகர் முழுவதும் ஒட்டி பரபரப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

இதுகுறித்து நீதிமன்றம் சென்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் நம்மிடம் கூறும்போது, “தற்போது நெடுஞ்சாலை மற்றும் கட்டுமானப் பிரிவின் கீழ் ரூ.200 கோடிக்கு சுமார் 40 வேலைகளுக்கான ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தது.

அந்த விளம்பரத்தைப் பார்த்து கோட்டப் பொறியாளரிடம் குறிப்பிட்ட தேதிக்குள், தளப்பார்வை சான்று மற்றும் இயந்திரப்பயன்பாடு சான்று கேட்டு விண்ணப்பித்தோம். ஆனால்

கோட்டப் பொறியாளர் வேண்டுமென்றே காலதாமதம் செய்தார். பலமுறை கேட்ட பிறகு 'நீங்க முருகேசனைப் பாருங்க'ன்னு சொன்னார். நாங்க அவரை ஏன் சார் பார்க்கணும்? என்று கேட்டோம். ஆனால் ஒப்பந்தக்காலம் முடியும் வரை கொடுக்கவில்லை. அதனால தான் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளோம்.

ஏற்கெனவே இருந்த கோட்டப் பொறியாளர் பரவாயில்லை. ஆனால் அவரை கட்டாய விடுப்பில் போகச்சொல்லிட்டு அறந்தாங்கி கோட்டப்பொறியாளர் புதுக்கோட்டை பொறுப்பு எடுத்துகிட்டு இப்படி எங்களை பழிவாங்கிட்டார். மேலும், ஒரு பணிக்கு எவ்வளவு கமிசன் என்பதை பட்டியல் போட்டுக் கொடுத்து, 18.65 சதவீதம் கமிசனை இ-டெண்டரில் கலந்துகொள்வதற்கு முன்பே கொடுக்கணும் என்று சொல்றாங்க. அந்த கமிசனை கொடுக்க முன்வந்தவர்களுக்கு முருகேசன், அவர் வீட்டில் வைத்தும், தனியார் விடுதி, நெடுஞ்சாலை விருந்தினர் மாளிகையில் வைத்தும் சான்று வழங்கியிருக்கிறார்" என்றனர்.

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடுத்துள்ள மூத்த வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியம் நம்மிடம், "புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் டெண்டரில் தொடர்ந்து முறைகேடு நடப்பதாகப் புகார்கள் வருகிறது. பாதிக்கப்படுபவர்கள் நீதிமன்றத்துக்கு சென்று, தீர்ப்பு பெற்று, பணிகளைப் பெறவேண்டியிருக்கிறது. இவ் விவகாரத்திலும், சான்றுகள் வழங்காமல் காலதாமதம் செய்து, டெண்டர் காலம் முடிந்த பிறகு சான்றுகளை வழங்குகிறார்கள். அதிகாரிகளின் மெத்தனத்தால் ஒப்பந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், ஏற்கெனவே பல பணிகளை செய்தவர்களிடம் பிளாண்ட், இயந்திரங்கள் இருப்பது தெரிந்தும்கூட வேண்டுமென்றே தாமதம் செய்வதால் மன உளைச்சல் ஏற்படுகிறது. அதனால்தான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருக்கிறோம்" என்றார்.

முதல்நிலை ஒப்பந்தக்காரர் முத்துக் குமார், "கடந்த ஆட்சிக்காலத்தில் தி.மு.க. ஒப்பந்தக்காரர்கள் பாதிக்கப்பட்டோம். இப்ப அதைவிட ரொம்ப பாதிக்கப்படுகிறோம். ரூ.70 லட்சம் பணிக்கு ரூ.3 கோடிக்கான இயந்திரம் இல்லையென்று காரணம் சொல்லி புறக்க


முத்துக்குமார்


மூத்த வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியம்


ணிக்கிறார்கள். 20 சதவீதம் கமிசன் கொடுத்து விட்டு தரமான வேலையை எப்படி செய்ய முடியுமென்று தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனு அனுப்பியிருக்கிறோம். நீதிமன்றத்திற்கும் சென்றுள்ளனர்" என்றார். இந்த புகார்கள் குறித்து விளக்கம்பெற கோட்டப் பொறியாளர் மாதேஷ்வரனை தொடர்புகொண்டபோது நமது அழைப்பை துண்டித்தார்.

திருச்சி மேற்பார்வைப் பொறியாளர் இளம்வழுதியிடம் கேட்டபோது, "ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு ஒப்பந்தக் காரர்கள் கோட்டப் பொறியாளரிடம் விண்ணப்பம் செய்வதுடன் தேவையான ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஆவணங்கள் சரியாக இருந்தால் சான்று வழங்கப்படும். குறைபாடுகள் இருந்தால் சான்று கிடைக்காது. நாங்க வேறு ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்தும் சான்று வழங்க சொல்வதில்லை. தற்போது ஒப்பந்தக் காரர்கள் நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன் றம் சொல்றபடி செயல்படுத்துவோம்" என்றார்.

கோட்டப் பொறியாளர் கையெழுத்திட்ட சான்றுகளை 20 சதவீதம் கமிசன் பெற்றுக் கொண்டு தனது வீட்டிலும், தனியார் ஓட்டல், பொதுப்பணித்துறை விருந்தினர் மாளிகையில் வைத்துக் கொடுத்ததாக கூறப்பட்ட அ.தி.மு.க ஒப்பந்தக்காரர் முருகேசன் நம்மிடம், "நான் அ.தி.மு.க.காரன், நடக்கிறது தி.மு.க. ஆட்சி. நான் எப்படி டெண்டர்களில் ஆதிக்கம் செலுத்த முடியும்? தகுதியானவர்களுக்கு சான்றும், டெண்டரும் கிடைக்கும். முறைப்படி தான் டெண்டர் நடக்கிறது" என்று தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். தமிழ்நாடு அரசு இதனை கவனிக்குமா?

**-இரா.பகத்சிங்**

# கைதி எண் 9658



இளமை பருவத்தில் ஐயா நல்லகண்ணு

## (94) தாத்தா கேட்ட கேள்வி

குடும்ப வாழ்க்கையில் கணவன்-மனைவி உறவில், அமைந்த நுட்பங்களை, யாராலும் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. நீண்ட பயணத்தில் சில நேரங்களில், தவிர்க்க முடியாத சலிப்பு ஒன்றும், எப்படியோ வந்துவிடுகிறது. இதற்கு, அளவிட முடியாத அன்பின் எதிர்பார்ப்பும் காரணம் என்று புரிந்து கொள்ளலாம். சில நேரங்களில் இது எரிச்சல், கோபம், வெறுப்பு என்ற நிலைக்கு சென்றுவிடுகிறது. மாபெரும் தலைவர்களின் வாழ்க்கையிலும், இது ஒரு பிரச்சனையாக வந்திருக்கிறது. தோழர் நல்லகண்ணுவின் நீண்ட வாழ்க்கையில், இது எவ்வாறு அமைந்திருந்தது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது அவரது வாழ்வின் மறுபக்கம்.

எளிமையான அவரது குடும்ப வாழ்க்கை நான் அறிந்தவரை, மகிழ்ச்சி குறையாது, அனைத்துப் பிரச்சினைகளைக் கடந்து சென்றதாகவே நான் உணர்ந்துகொள்கிறேன்.

## நேற்று செய்யவேண்டியதை இன்று செய்தால் சோம்பேறி -இன்று செய்யவேண்டியதை இன்றே செய்தால் சுறுசுறுப்பானவர் -நாளை செய்யவேண்டியதை இன்று செய்தால்... வெற்றியாளர்!

தோழர் மிகுந்த சுய கட்டுபாடுள்ளவர். வரவு, செலவைப் பற்றி மிகவும் அக்கறைகொண்டவர். தேவையற்ற எதையுமே அவர் விரும்புவது மில்லை, வாங்குவதும் இல்லை. தனது குடும் பத்தினரையும், தன்னை சுற்றியிருப்பவர்களை யும், சுய கட்டுப்பாடு கொண்ட வாழ்க்கைக்கு சிபாரிசு செய்துகொண்டேயிருப்பார்.


தோழரைப் பற்றிய எனது இந்த உணர்வை, அம்மா அவர்கள் அவரது வாழ்வின் எளிமை பற்றியதாக, ஒன்றைக் கூறுகிறார். துணியை பெரும்பாலும் அவர் சலவைக்கு போடுவ தில்லை. அதற்கு அவர் மழுப்பல் காரணங் களைச் சொன்னாலும், வீண் செலவு என்ற சிக்கன உணர்வுதான் காரணம் என்று பேட்டியில் கூறியுள்ளார். எனக்கு வேறொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அது சி.பி.ஐ. பொதுச்செயலாளராக செயலாற்றிய தோழர் சி.ராஜேஷ்வரராவ் பற்றிய ஞாபகம்.

அது இந்திராகாந்தியின், அவசரகால சட்டம் அமலிலிருந்த 1975ஆம் ஆண்டு. கட்சியின் டெல்லி தலைமை அலுவலகத்தில் மார்க்சீயம் பயிலும் மாணவன் நான். 45 நாட்கள் அங்கேயே தங்கியிருந்தேன். எனக்கு அப்பொ ழுது வயது 19. தஞ்சை மாவட்டத்தின் விவசாய கிராம வாழ்க்கையை மட்டும் அறிந்திருந்த எனக்கு, டெல்லியும் அஜய் பவனமும் ஓர் அதிசயமாக தெரிந்தது. அதில் ஓர் அனுபவம். பல அறைகளை கொண்ட அஜய் பவனில் ஒரு அறையில் மட்டும், காலை நேரங்களில் துணி துவைக்கும் சத்தம் வந்துகொண்டேயிருக்கும். அது தோழர் ராஜேஷ்வரராவ் தன் துணியை தானே, துவைத்துக் கொள்ளும் சத்தம். அன்று எனக்கு அதன் மகத்துவம் புரியவில்லை. ஆடம்பர அரசியல் உலகத்தையும், ஆடம்பர அரசியல் தலைவர்களையும் பிற்காலத்தில் அருகிலிருந்து பார்த்தபோதுதான், அதன் மகத்துவத்தைப் புரிந்துகொண்டேன்.

தோழர் ராஜேஷ்வரராவ், வாழ்க்கை முறையே, தோழர் நல்லகண்ணு அவர்களிடமும் அமைந்திருந்தது.. இவர், தொடர் பயணங்களில் தன்னிடம் சேர்ந்து விட்ட அழுக்குத் துணி களைத் துவைப்பதற்கென்று சில இடங்களை தேர்வுசெய்து வைத்திருப்பார். தஞ்சை கட்சி அலுவலகத்தில் அன்றிருந்த சிறப்பான நீர்த்தொட்டி. அதன் அருகில் அமைந்த துணி துவைக்கும் கல். இதே போன்று திருநெல்வேலி கட்சி அலுவலகத்தில் அமைந்த கிணறு, அதில் தொங்கிக் கொண்டிருக்கும் டயரால் இணைக் கப்பட்ட வாளி, இவை எல்லாம் அவரது நட்பு வட்டங்கள். இங்கு வேறொன்றை பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு வந்துவிட்டது. ஒருகாலத்திற்குப் பின்னர், துணி துவைப்பதி லுள்ள சங்கடங்கள் ஓரளவிற்கு குறைந்து விட்டதாக அடிக்கடி சொல்லிக் கொள்வார். பவுடரை நீர் கலந்து, ஊற வைத்து துணியை வெளுக்க எவ்வளவு எளிதாக இருக்கிறது என்பார். அதை என்னால் இப்பொழுது ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொள்ள முடிகிறது. அது surf துணிப்பவுடர் அறிமுகப் படுத்தப்பட்ட காலம்.

இவரிடம் அமைந்த எளிமை, தேவையற்ற எளிமை என்றுகூட, சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இவ்வாறு பேசப்படுவதை அவரும் அறிவார். ஆனால் அதை அவர் பொருட்படுத்திக்கொள்வில்லை. அது தனக்கான வாழ்க்கை நெறி என்பதில் உறுதி கொண்டிருந் தார். இது கட்சிக்குள் பல இளைஞர்களுக்கு நம்பிக்கை தருவதாகவும் வழிகாட்டுதலாகவும் அமைந்திருந்தது. கட்சித் தலைவர்களை யொட்டியே அதற்கு அடுத்த தலைமுறையின் உருவாக்கமும் நடைபெறுகிறது.

கட்சித் தலைவர்களின் எளிய வாழ்க்கை, முழுநேர வாழ்க்கையின் தொடக்கத்திலேயே தொடங்கிவிடுகிறது. முழுநேர ஊழியர் வாழ்க்கையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். முழுநேர ஊழியர்களுக்கு, ஊதியம் வழங்கப்படுதலில் உயர்மட்டத் தலைவர்கள், இரண்டாம் கட்டத் தலைவர்கள், மூன்றாம்கட்டத் தலைவர்கள் என்று தரம் பிரித்து ஊதியம் வழங்கப்படுவ தில்லை. கட்சியில் நீண்ட காலம் பணியாற்றியவர்கள், குறுகிய காலம் பணி யாற்றிவர்கள் என்றும் ஊதியம் வழங்கப்படுவ



www.nakkheeran.in

**-சி.மகேந்திரன்**

**எப்பொழுது உன்னை நீ நம்ப ஆரம்பிக்கின்றாயோ, அந்தகணமே உன் முயற்சிகள் எல்லாமே வெற்றிகளாக மாறும்!**

தில்லை. முழுநேர ஊழியர்கள் அனைவருக்கும் கிட்டத் தட்ட சமமாகவே ஊதியம் வழங்கப்படும். தோழர் நல்ல கண்ணு செயலாளராக பணியிலிருந்து விடுபட்ட கடைசிக் காலத்தில் அதாவது 2004ஆம் ஆண்டில், அவர் மாத ஊதியமாக, 1500 ரூபாய் பெற்றுக்கொண்டார். எனக்கும் அதே ஊதியம்தான். இதை வைத்துக்கொண்டு அந்த நகர வாழ்க்கையில், வீட்டு வாடகை முதல் அனைத்தையும் செய்யவேண்டும். அவருக்கு வாழ்நாள் முழுவதும் இதே வாழ்க்கைதான். ஆனால் எந்தக் காலத்திலும் தன் கையில் பணம் இல்லை என்று கூறும் ஒரு வார்த்தையைக் கூட அவரிடம், கேட்டதில்லை. இதற்கான காரணம் அம்மா ரஞ்சிதம் என்பதை ஆரம்பத்திலேயே புரிந்துகொண்டேன்.

இதற்கு இவர்களின் மூத்த மகள் காசிபாரதியின் ஊடகப் பதிவு ஒன்று, ஆதாரமாக அமைந்துள்ளது. அப்பாவின் தந்தை, தனது தாத்தா, தன்னுடன் நடத்திய உரையாடலை இவர் பதிவு செய்துள்ளார். இதன்மூலம் தன் மகனுக்கு இப்பொழுதாவது குடும்பப் பொறுப்பு வந்திருக்கிறதா? என்பதை பேத்தியின் மூலம் தெரிந்துகொள்ள விரும்பியதாகத் தெரிகிறது. ஒருமுறை தாத்தாவை பார்க்கச் சென்றிருந்தோம். தாத்தா என்னிடம் கேட்டார். ‘உங்கள் அப்பன் உங்களைப் பார்த்தானா?’ என்று. அடுத்த கேள்வி ‘ஏதாவது உங்களுக்கு வாங்கி வந்தானா?’, மூன்றாவது கேள்வி ‘அம்மாவிடம் ஏதாவது பணம் கொடுத்தானா?’ என்பது. இதில் மூன்றாவது கேள்விக்கு காசிபாரதி அளித்த பதில், தாத்தாவின் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றத்தைத் தந்துவிட்டது.

மூன்றாவது கேள்விக்கு காசிபாரதி அளித்த பதில், ‘அப்பா, அம்மாவுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. அம்மாதான் அப்பாவுக்கு பத்து ரூபாய் கொடுத்தாள்’ என்பது. இதைச் சொன்னபோது தாத்தாவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை அப்படியே பதிவு செய்துள்ளார் காசிபாரதி.

அந்த வார்த்தை ‘அடி பைத்தியக்காரி’ என்பது. அடி பைத்தியக்காரி என்ற தாத்தாவின் வார்த்தைகளை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். காலமெல்லாம் பணம் சேர்க்கத் தெரியாத பைத்தியக்காரனாக அவன் வாழ்ந்துவருகிறான். அதற்கு நிர்பந்தம் தந்து திருத்தாமல், நீ சம்பளத்திலிருந்து பணம் கொடுக்கிறாயே என்பதுதான் அந்த பைத்தியக்காரி என்னும் சொல்லின் பொருள்.

உறவுகள், பணம், பொருளாதாரம் என்ற எல்லைகளில் சில நேரங்களில் அமைந்து விடுகிறது. இவையெல்லாவற்றையும் துச்சமெனக் கடந்து நின்ற அம்மாதான், அய்யா நல்லகண்ணு வாழ்க்கையின் வெற்றி ரகசியம்.

**(தொடரும்)**


Vol.38
Issue No:55
**நக்கீரன்**

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:** ஆரூர் தமிழ்நாடன், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:** இரா.இளையசெல்வன், தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :** க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன், எம்.செந்தில்குமார், தா.மகாராஜன், சி.பிரான்சிஸ், பி.என்.ஆனந்த்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :** ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:** துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:** ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:** எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:** ப.ராம்குமார்
**பிழை திருத்துவோர் :** து.கண்ணன், பார்த்திபன்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** பிரின்ஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**முதன்மை காசாளர் :** நித்தியானந்தன்
**தயாரிப்பு மேலாளர்கள் :** பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :** சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch



சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.




# சர்ச்சையில் சிக்கிய

# பைசன்

தீபாவளிக்கு ரிலீஸாகி பரபரப்பாகப் பேசப்பட்டுவரும் 'பைசன்' திரைப்படம் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது. தென்மாவட்டத்தில் நிலவும் சாதிய பிரச்சனைகளை வன்மத்தோடு கையாண்டிருக்கிறார், சமூகங்களுக்கிடையே மோதலை உருவாக்குகிறார், கபடி வீரரின் வாழ்க்கையை படமாக்கியவர், அதன் பின்னணியில் நடந்த க்ரைம்களை மறைத்துவிட்டார் என்றெல்லாம் இயக்குநர் மாரி செல்வராஜுக்கு எதிராக சர்ச்சைகள் வெடித்தபடி இருக்கின்றன.

மாரி செல்வராஜ் இயக்கத்தில், துருவ் விக்ரம் நடிப்பில் வெளிவந்துள்ள படம் பைசன் காளமாடன். தமிழர்களின் வீர

விளையாட்டுகளில் ஒன்றான கபடி விளையாட்டை மைய மாக வைத்து இந்த படம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த கபடி வீரரும் இந்தியாவின் அர்ஜுனா விருது பெற்றவருமான மணத்தி கணேசன் என்பவரின் நிஜ கபடி வாழ்க்கையையே படமாக இயக்கியிருக்கிறார் மாரி செல்வராஜ்.



படம் ரிலீசானதிலிருந்து கலவையான விமர்சனங் களைப் பெற்றுவருவதுடன் சர்ச்சைகளையும் ஏற்படுத்தி வருகிறது பைசன். குறிப்பாக, தென்காசி மாவட்டத்தில் செயல்படும் ‘சத்ரிய சான்றோர் படை’ என்ற அமைப்பு, மாரி செல்வராஜை கைது செய்யவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது.

‘பைசன் படத்தில் குறிப்பிட்ட சமூகத்தை அவமதிக்கும்விதமாகவும், சமூக கலவரத்தைத் தூண்டும்விதமாகவும் காட்சிகள் வடிவமைக் கப்பட்டுள்ளன. சமூகப் பதட்டத்தை ஏற் படுத்துவதாகவும் இருக்கிறது’ என்று குற்றம்சாட்டுகின்ற னர் அந்த அமைப் பினர்.



இயக்குநர்
மாரி செல்வராஜ்

அதேசமயம், இதற்கு நேர்மாறாக, சினிமா பிரபலங்கள் பலரும் மாரி செல்வராஜை ஆதரித்து சமூக வலைத்தளங்களில் கருத்துக் களை பதிவுசெய்கின்றனர். தமி ழகத்தின் தென்மாவட்டங்களில் வாழும் குறிப்பிட்ட சமூகத்தின் குரலாக இந்த படத்தில் மாரி பேசுகிறார்.

படத்தில் சாதிய வன்மத்தை காட்சிப்படுத்தியிருந்தாலும் எந்த ஒரு சாதியையும் அவர் இழிவுபடுத்தவில்லை. அனைத்து காட்சிகளிலும் நெறிமுறை களை அவர் மீறவில்லை. சாதிய பிரச்சனைகள் எப்படியெல்லாம் ஒரு சாமானிய விளையாட்டு வீரனை அழிக்கத் துடிக்கிறது என்பதை அழுத்தமாகச் சொல்லியிருக் கிறார் என்றெல்லாம் மாரி செல்வ ராஜுக்கு ஆதரவான குரல்கள் எதிரொலிக்கின்றன. இதனால் ‘பைசன்’ படம் தொடர்பான விவாதங்கள் பொதுவெளியிலும் சினிமா உலகிலும் சூடுபிடித் திருக்கிறது.

இதற்கிடையே ரசிகர்களோடு

www.nakkheeran.in

ரசிகராக நெல்லையில் 'பைசன்' படத்தைப் பார்த்து விட்டு வந்த இயக்குநர் மாரி செல்வராஜிடம் செய்தியாளர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

அப்போது அவர், "தென்மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களிடம் அவர்களுக்குப் புரியும் வகையில் பேசவேண்டும், ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களிடமும் பேச வேண்டும் என நான் நினைத்தேன். அதற்கு ஒரே வழி மணத்தி கணேசனின் கதையை எடுப்பதுதான். அவரது கதைக்குள் என் கதையும் இருக்கிறது. தென்மாவட்ட இளைஞர்களின் கதை இது. அவர்களின் கனவு, கோபம், வலி, தேடல் எல்லாம் இதில் இருக்கிறது. தென்மாவட்டங்கள் மீது கட்டமைக்கப்பட்ட பிம்பத்தை மாற்றவேண்டும், தென்தமிழக இளைஞர்களின் மனநிலையை மாற்றவேண்டும் என்பதே பைசன் படத்தின் நோக்கம்" என்று விவரித்தார் மாரி செல்வராஜ்.

மணத்தி கணேசனின் கபடி வாழ்க்கையை மையப்படுத்தி எடுக்கப்பட்டிருக்கும் பைசன் திரைப்படத்தில், 1994-ல் ஜப்பானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய கபடி அணி தங்கம் வென்றதையும் அதன் உற்சாகத்தையும் காட்சிப்படுத்தியிருக்கிறார் மாரி செல்வராஜ்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய முன்னாள் விளையாட்டு வீரர்கள்,

"ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1994-ல் ஜப்பானில் நடந்தது. இதில், இந்திய கபடி அணியும் கலந்து கொண்டது. அன்றைக்கு தமிழகத்தைச் சேர்ந்த ராஜரத்தினம் என்பவர்தான் இந்திய கபடி அணிக்கு கேப்டன். அந்த காலகட்டத்தில், தமிழக உளவுத்துறையின் (எஸ்.பி.சி.ஐ.டி) எஸ்.பி.யாக இருந்த குண்டு பாண்டியன், இந்திய கபடி அணி சம்மேளனத்தின் தலைவர். அந்த குண்டு பாண்டியன் தலைமையில்தான், அன்றைக்கு இந்திய கபடி அணி ஜப்பானுக்குச் சென்றது.

ராஜரத்தினம், மணத்தி கணேசன் உள்பட தமிழகத்தைச் சேர்ந்த 4 வீரர்கள் இந்திய கபடி அணியில் இடம்பெற்றிருந்தனர். ஜப்பானில் நடந்த கபடிப் போட்டியில் பாகிஸ்தானை எதிர்த்து இந்திய அணி களமிறங்கியது. இரு அணிகளும் மூர்க்கமாக மோதின. இறுதியில், இரு அணிகளும் சமமான புள்ளிகளை எடுத்திருந்த நிலையில், பிரச்சனைகள் வெடித்தன. போட்டியை ரத்து செய்யலாம் என்ற நிலையில் ரீ மேட்ச் நடத்த இந்திய அணி சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதனை பாகிஸ்தானும் ஏற்றுக்கொள்ள, ரீ மேட்ச் நடத்தப்பட்டது. அதில் இந்திய அணி வெற்றிபெற்று தங்கம் வென்றது. சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது இந்திய அணி. அன்றைக்கு சர்வதேச அளவில் பரபரப்பாக பேசப்பட்டது அந்த போட்டி" என்றனர்.

சாதிய வன்மத்துக்குள் விளையாட்டுகள் சிக்கக்கூடாது என சமூக அக்கறையோடு காட்சிப்படுத்தியிருக்கிறார் மாரி. இது பாராட்டப்படவேண்டிய விசயம்தான்.

-இரா.இளையசெல்வன்

## சுய லாபத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வீரர்கள்!

94ல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றுத் திரும்பிய வீரர்களின் லக்கேஜ்களை விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்டபோது, ஜப்பானிலிருந்து கொண்டுவரப்பட்ட கம்ப்யூட்டர் உதிரிபாகங்கள் (டிஸ்குகள்) சிக்கின. இந்திய கபடி அணி வீரர்கள் கைதுசெய்யப்படும் சூழல் உருவானது. ஆனால் அது சர்வதேச அளவில் இந்திய வீரர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் என்பதால் அந்நடவடிக்கை தவிர்க்கப்பட்டது. அப்போது, இந்த நடவடிக்கைக்குப் பின்னால் அன்றைய அ.தி.மு.க. எம்.பி. ஸ்ரீதர், காங்கிரஸ் பிரமுகர் ராயபுரம் மனோ பெயர் அடிபட்டது. ஆனாலும் தன் அரசியல் செல்வாக்கால் மனோ தப்பிவிட்டார். விளையாட்டு வீரர்களை, தங்கள் சுயலாப முயற்சிக்குப் பயன்படுத்திய அந்த அரசியல் நிகழ்வுகளையும் படத்தில் பதிவுசெய்திருக்கவேண்டும் இயக்குநர் மாரி செல்வராஜ் என்கின்றனர். ●

www.nakkheeran.in



சாலையே
பாதுகாப்பு
குடோனாக



# மழையில் முளைக்கும் நெல்மூட்டைகள்!

## –கண்ணீரில் விவசாயிகள்!

**த**மிழ்நாட்டில் விவசாயிகள் விளைவிக்கும் நெல் மூட்டைகளை அரசே கொள்முதல் செய்யும் வகையில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துள்ளது. ஆனாலும் பல இடங்களில் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்காததால் மழையில் நனைந்து முளைத்து நாசமாகிக்கொண்டிருக்கின்றன.

தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியில் உற்பத்தியான நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய காலதாமதம் ஏற்பட்டதால் மழையில் நனைந்து நெல்மணிகளை உலர்த்தக்கூட முடியாமல் விவசாயிகள் தவித்துவருகின்றனர். பல இடங்களில் முளைத்து நாசமாகிறது. இதனால் விவசாயத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்டமுடியாமல் விவசாயிகள் தவித்தநிலையில் நெல் கொள்முதலை வேகப்படுத்தக் கோரி சாலைமறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

15 நாட்களுக்கு மேலாக நெல் மூட்டைகள் தேங்கியதால் சட்டமன்றத்தில் கேள்வியெழுப்பிய நிலையில், உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திலும் நாளொன்றுக்கு சுமார் 2000 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாகக் கூறினார். மேலும் “கொள்முதல் செய்யப்படும் நெல்மூட்டைகள் பாதுகாப்பாக குடோன்களில் வைக்கப்படுகிறது. மத்திய அரசு செறிவூட்டப்பட்ட அரிசி கலப்பதற்கு அனுமதிகொடுக்காததால் அரவைக்கு அனுப்பமுடியவில்லை. அ.தி.மு.க கூட்டணியில் இருப்பதால் நீங்கள் விரைந்து மத்திய அரசு அனுமதியை பெற்றுக்கொடுங்கள்” என்றார்.

இந்த நிகழ்விற்கு பிறகும் கொள்முதல் நிலையங்களில் நெல்மூட்டைகள் தேங்கிக் கிடக்கிறது. இதனை உடனே கொள்முதல் செய்யவேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயி ஜீவகுமார் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்துள்ளார்.

இந்த தேக்கத்திற்கு காரணம் என்ன என்ற நமது கேள்விக்கு, “இந்த வருடம் தென்மேற்கு பருவமழையும் சரியாக இருந்தது. போதிய அளவு தண்ணீர் கிடைத்ததால் கடந்த ஆண்டுகளைவிட 3 மடங்கு அதிகமாக குறுவைச் சாகுபடி செய்யப்பட்டது. அதனால் 16ஆம் தேதிக்குள்ளாகவே சுமார் 10 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது. இன்னும் பல லட்சம் டன் நெல் தேங்கியுள்ளது. சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளதை அதிகாரிகள் சரியாகக் கணக்கிட்டு கொள்முதலை வரமுறைப்படுத்தாத தான் இந்த தேக்கத்திற்கும் சேதத்திற்கும் காரணம்” என்றனர்.

இந்தநிலையில்தான் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் கல்லணைக் கால்வாய் கடைமடைப் பாசன பகுதியான

www.nakkheeran.in



மும்பை விமான நிலையத்தில் ரூ.19 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் –3 பேர் கைது



எடப்பாடியிடம், விவசாயிகள் குமுறல்

அத்தாணி சுற்றியுள்ள கிராமங்களில் விளைந்த குறுவை நெல் மணிகளை அத்தாணி கிராமத்தில் உள்ள கிராம இ-சேவை மையத்தில் இயங்கும் அரசு நேரடி நெல் கொள் முதல் நிலையத்தில் விற்பனை செய் துள்ளனர். கொள்முதல் செய்யப் பட்ட சுமார் 2 ஆயிரம் மூட்டை நெல் மணிகளை அதே பகுதியில் தரை யில் அடுக்கி வைத்துள்ளனர். மேலே யும் சரியான தார்ப்பாய் இல்லை.

கடந்த சில நாட்களாக பெய்த மழையில் அனைத்து நெல்மூட்டை களும் நனைந்து முளைத்து வெளியே வந்துவிட்டது. இப்போது இரவு நேரங்களில் அதை ஏற்றிச் செல்கின்றனர். அதிகாரிகளின் அலட்சியத்தால் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான நெல்மூட்டைகள் நனைந்து முளைத்துச் சேதமாகி விட்டது. விவசாயிகள் கொண்டு வரும் நெல்லில் ஈரப்பதம் அதிகம் என்று காரணம் சொல்லும் ஊழியர்கள், இப்ப நனைந்து நாசமான நெல் மூட்டைகளை உலர்த்திக்கொண்டிருக்கிறார்கள். முளைத்த நெல்மணிகளை என்ன செய்வது? அரசுக்கு எவ்வளவு இழப்பு என்கின்றனர். இந்நிலையில் தஞ்சை மாவட்டம் பிள்ளையார் பட்டியில் உள்ள நெல் பாதுகாப்பு குடோனுக்கு அமைச்சர்கள் சக்கரபாணி, கோவி.செழியன்,

## ரஷியாவிடம் இருந்து ரூ.10 ஆயிரம் கோடிக்கு ஏவுகணைகள் வாங்க இந்தியா திட்டம்

மெய்யநாதன் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

"புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஊர்களில் போலி விவசாயிகள் பெயரில் வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதிகாரிகள் கமிசனுக்காக இப்படி செய்கிறார்கள் என்று கடந்த மாதம் 30-ஆம் தேதி கொள்முதல் நிலைய ஊழியர்களே மாவட்ட ஆட்சியரிடம் புகார்கொடுத்துள்ளனர். ஆனால் மாவட்ட நிர்வாகமும் கண்டுகொள்ளவில்லை. இதனால் டெல்டாவில் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்" என்கின்றனர் கொள்முதல் நிலைய ஊழியர்கள்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கடந்த புதன்கிழமை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு சென்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்களையும் விவசாயிகளையும் பார்த்துள்ளார். விவசாயிகளைப் பார்த்த பிறகு திருவாரூரில் செய்தியாளர்கள் சந்திப்பில் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, "கடந்த அ.தி.மு..க ஆட்சியில் ஒரு நாளைக்கு 1000 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்தோம் ஆனால் இந்த ஆட்சியில் 800 மூட்டைகள் வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளின் நெல் கொள்முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளைக்கூட பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியாத நிலைதான் உள்ளது. விவசாயிகளின் கண்ணீருக்கு முதலமைச்சர் என்ன பதில் சொல்லப்போகிறார்? தற்போது சம்பா பயிர்களும் தண்ணீரில் மூழ்கி பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதையும் இந்த அரசாங்கம் கவனிக்கவேண்டும்" என்றார்.

''குறுவை நெல் கொள்முதலில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளை விரைந்து சரிசெய்து குளறுபடிகள் இல்லாமல் கொள்முதல் செய்திட, இப்போதே அதிகாரிகள் தயார் நிலையில் இருக்கவேண்டும். அரசும் அதிகாரிகளை துரிதப்படுத்தவேண்டும்" என்கின்றனர் விவரமறிந்தவர்கள்.

**-இரா.பகத்சிங்**

அமைச்சர் சக்கரபாணி ஆய்வு



# வலைவீச்சு!

திருப்புவனம் அஜித் வழக்கில்... சிபிஐ விசாரித்தால் நீதி வெல்லாது.... சிறப்பு புலனாய்வு குழு விசாரித்தால் தான் நீதி வெல்லும்....




கரூர் வழக்கில் சிறப்புப் புலனாய்வு குழு விசாரித்தால் நீதி வெல்லாது.... சிபிஐ விசாரித்தால் தான் நீதி வெல்லும்...



சூப்பர்ப்ப்ப்பூ...

கூட்ட நெரிசலில் ஒரு காவலருக்குக் கூட காயம் ஏற்படவில்லை , அதனால் சிபிஐ விசாரணை வேண்டும் - உச்ச நீதிமன்றத்தில் விஜய் கட்சி வாதம்





நெரிசலில் தவெக நிர்வாகி, தொண்டன் ஒருத்தன் கூட சாகலையே அதை ஏன்டா மறைக்கிறீங்க...

ஏன்டா,விஜய் முதல் அமைச்சர் ஆகனும்னு தறிகெட்டு திரியிறியே... அவரோட எந்த கொள்கை உன்ன கவர் பண்ணுச்சு...




சொகுசு பஸ்ஸுக்கு முன்னாடி நாங்க ஆடும்போது... லைட்டை.. போட்டு... போட்டு..ஆப் பண்ணி... தமிழ்நாட்டை பிரகாசமா வச்சிருப்பேன்னு காட்னாரே அது ஒண்ணு போதாதா!!??



"பிரபோ... நான் பாஜக அனுப்பிய ஆஞ்சநேயன்... அப்படியே உங்களை கரூர் கொண்டு சென்று துளியும் சேதாரம் இல்லாமல் மீண்டும் பனையூரில்... கொண்டு வந்து விட உத்தரவு..காலை 8 மணிக்கு கிளம்பலாம்..""

" ப்ரோ..காலை 8மணின்னு சொல்வோம். மாலை 7 மணிக்கு போவோம் .. அப்போதான் கூட்டம் அள்ளும். நானும் அழுதுக்கிட்டே ஆறுதல் சொல்ல வசதியா இருக்கும்

எங்கள் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு சரியான உத்தரவுகள் வந்திருக்கிறது - விஜய் கட்சியின் ஓனர் ஆதவ்

அப்போ....ஊரு ... ஊருக்குப் போயி.... மாவட்டத்துக்கு 40...50 பேரை சாகடிக்கலாம்னு சொல்றியா...??























PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025  Date of Publication on posting : Every Tuesday & Friday



advt